வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / விசா சேவை / ETA விசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 02 | இதழ்: 20 | வள்ளுவர் ஆண்டு 2054 | 26.04.2024 – 02.05.2024 | பக்கங்கள் – 12 | ஊக்குவிப்பு: 80/=

## தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம்!

## தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள்

## ஓரணியாக செயற்படுவதே காலத்தின் தேவை!



பக்கம் 10

## மறுக்கப்படும் உரிமை: தொடரும் கிழக்குத் தமிழர்களின் போராட்டம்!



பக்கம் 05



## ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகம்!

பக்கம் 07

## அனுரவிடம் ஒரு சில கேள்விகள்?



பக்கம் 06




## தமிழர் மாநிலத்தில் பொது வாக்கெடுப்பு.

அதை நோக்கிய நகர்வையே முன்னெடுத்துள்ளோம்.

பக்கம் 03 சீ.வி.விக்னேஸ்வரன்

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# தமிழ் மக்களுக்கு வரலாற்றுப் படிப்பினை

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில், நாகாலாந்து மாநிலத்தின் கிழக்குப் பகுதி மக்கள், ஒரு வரலாற்றுப் படிப்பினையை கற்பித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 13 இலட்சம் வாக்காளர் களை கொண்ட இந்த மாநிலத்தின், கிழக்குப் பகுதியில் 6 மாவட்டங்களில் உள்ள மக்கள் வாக்களிப்பை முற்றாகப் புறக்கணித்திருக்கிறார்கள்.

இந்தப் பகுதியில் உள்ள 4 இலட்சம் பழங்குடியின வாக்காளர்களில், எவருமே வாக்களிக்கச் செல்லவில்லை. இங்கு வாக்களிப்பு வீதம் பூச்சியமாக இருந்ததை ஊடகங்கள் வியப்புடன் சுட்டிக்காட்டுகின்றன. கிழக்கு நாகாலாந்தில் வாழும் தங்களின் உரிமைகள் மதிக்கப்படுவதில்லை, தங்களுக்கு போதிய அபிவிருத்தித் திட்டங்கள் வழங்கப்படுவதில்லை, நிதி ஒதுக்கப்படுவதில்லை என்று இந்தப் பழங்குடியின மக்கள் கூறுகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு கிழக்கு நாகாலாந்து என தனியான மாநிலத்தைப் பிரித்து தர வேண்டும் என்று கோரியே தேர்தல் புறக்கணிப்பு ஆயுதத்தை கையில் எடுத்திருக்கிறார்கள்.ஏழு சமூகங்களைக் கொண்ட ஒரு பழங்குடியினம், ஒற்றுமையாக தங்களின் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.இது ஈழத் தமிழினம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடம்.இந்தப் பாடம், முக்கியமானதொரு தருணத்தில், கற்றுக் கொடுக்கப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.சிறிலங்காவில் இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் நடக்கப் போகிறது.

இந்த தேர்தலில், தமிழ்த் தரப்பு எவ்வாறு செயற்படப் போகிறது என்ற குழப்பம் இன்னமும் நீடித்துக் கொண்டிருக்கிறது.தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் தரப்புகளை ஒரே நிலைப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இன்னமும் வெற்றி பெறவில்லை.இவ்வாறானதொரு தருணத்தில் தான், கிழக்கு நாகாலாந்து மக்கள் ஒரு பாடத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.அவர்களின் இந்த தேர்தல் புறக்கணிப்பினால், நாகாலாந்தின் ஒரே ஒரு தொகுதியில் இருந்து இந்திய நாடாளுமன்றத்துக்கு எவரும் தெரிவு செய்யப்படாமல் போகப் போவதில்லை.

ஏனென்றால், இந்த 6 மாவட்டங்களை உள்ளடக்கிய, மூன்றில் ஒரு பங்கு மக்கள் தான் வாக்களிப்பை புறக்கணித்திருக்கிறார்களே தவிர, ஏனைய பகுதி மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.நாகாலாந்தின் ஏனைய பகுதி மக்களின் ஆதரவுடன் யாரோ ஒரு உறுப்பினர் வெற்றி பெறுவார் என்பதும், அந்தப் பழங்குடியின மக்களுக்குத் தெரியும். அதுபற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

அவர்கள் எதிர்பார்த்ததெல்லாம், தங்களின் தனி மாநிலக் கோரிக்கையை தங்களின் பகுதிக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டும் என்பதை தான்.அதனை அவர்கள் மிகச் சரியாகச் செய்திருக்கிறார்கள். 6 மாவட்டங்களின் ஒட்டுமொத்த மக்களும் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கியிருந்து ஒற்றுமையாக தங்களின் கோரிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இதன் ஊடாக, இந்திய அரசுக்கு ஒரு தெளிவான செய்தி வழங்கப்பட்டிருக்கிறது.அந்தச் செய்தி, தனியே, கிழக்கு நாகாலாந்து மக்களின் அரசியல் விருப்பம் மற்றும் அபிலாசைகளை மாத்திரம் வெளிப்படுத்தவில்லை. தங்களின் கோரிக்கையில் ஒற்றுமையாக இருக்கிறோம்- ஒன்றுபட்டு இருக்கிறோம் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.இந்த விடயத்தில் தான், ஈழத் தமிழினம், எந்தளவுக்குப் பின்னால் இருக்கிறது என்ற மீளாய்வு செய்து கொள்வது நல்லது.

வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் உள்ள தமிழர் மக்களால், இப்படியொரு முடிவை ஏன் எடுக்க முடியாது?கிழக்கு நாகாலாந்து மக்களைப் போல, தேர்தல் புறக்கணிப்பு முடிவை எடுக்க வேண்டும் என்றில்லை.தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுவது போல, தேர்தல் புறக்கணிப்பு மட்டும் தான், தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி அல்ல.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, அவருக்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வாக்களித்து, அதன் ஊடாகவும், ஒற்றுமையை வெளிப்படுத்தலாம்.அது தவிர, வாக்குச்சீட்டை செல்லுபடியற்றதாக்கியோ, வேறு வழிகளிலோ கூட, தமிழ் மக்களால் ஒரே கருத்தை வெளிப்படுத்த முடியும்.

ஜனாதிபதி தேர்தல்களில் சிங்கள வேட்பாளர்களை ஆதரித்து ஆதரித்து தமிழ் மக்களுக்கு எதுவும் கிட்டவில்லை.தமிழ்த் தலைமைகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை, அவர்கள் ஒருபோதும் நிறைவேற்றியதில்லை. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையோ, அரசியல் பிரச்சினைகளையோ தீர்த்து வைக்க முயன்றதில்லை.போர் முடிந்து 15 ஆண்டுகளாகியும், தங்களின் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல், தாய்மார்கள் வீதியில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

போர்க்காலத்தில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, அட்டூழியங்களுக்கு நீதி கிடைக்காமல் பல்லாயிரம் மக்கள் தவிக்கின்ற நிலை நீடிக்கிறது.இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளான தமிழ் மக்களின் நிலங்கள் இன்னமும் முழுமையாக மீள அளிக்கப்படவில்லை. அதற்கிடையில், சிங்கள மயமாக்கலும், பௌத்த மயமாக்கலும் திட்டமிட்ட அடிப்படையில், தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழரின் இருப்பை, கேள்விக்குட்படுத்தும் வகையில் சிங்கள பௌத்த பேரினவாதம், தனது செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.ஆக, அமைதி திரும்பி விட்டதாக கூறப்படும் நாட்டில் தமிழ் மக்கள், தங்களின் இருப்புக்காகவும், உரிமைக்காகவும் இன்றைக்கும் போராட வேண்டிய நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தநிலையை மாற்றக் கூடிய சிங்களத் தலைவர்கள் யாராவது உள்ளனரா?தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இது தான் தீர்வு என்று வெளிப்படையாக அறிவிக்கக் கூடிய, அந்த வாக்குறுதியை நிறைவேற்றக் கூடிய யாரேனும், உள்ளனரா?சிங்கள வேட்பாளர்கள் அனைவருமே தமிழர்களுக்கு எந்த வாக்குறுதியையும் வழங்காமல், நீதியை, உரிமையை, தீர்வை வழங்குவதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல், அவர்களின் வாக்குகளைச் சுளையாக அள்ளிக் கொள்வதில் தான் ஆர்வத்துடன் இருக்கிறார்கள்.

தமிழர்களுடன் இணக்கப்பாடு செய்து கொண்டால், தமிழர்களுக்கு உரிமைகளை, நீதியை, அதிகாரத்தை வழங்குவதாக வெளிப்படையாக அறிவித்தால், சிங்கள மக்களால் தாங்கள் நிராகரிக்கப்பட்டு விடுவோம் என்ற பயம் எல்லா சிங்களத் தலைவர்களிடமும் உள்ளது.

தமிழர்களுடன் இணங்கிச் சென்றால், தங்களுக்கு எதிராக சிங்கள தேசியவாத வாக்குகள் ஒருங்கிணைக்கப்பட்டு விடுமோ என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. அதனால் அவர்கள் தாங்கள் பாதுகாப்பான நிலையில் இருந்து கொண்டே, தமிழர்களின் வாக்குகளை சுருட்ட முற்படுகிறார்கள்.

இப்படித் தான், கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள வேட்பாளர்களை நோக்கித் தமிழர் தரப்பினால் திருப்பி விடப்பட்டது. கடைசியில் தமிழர்கள் ஏமாந்து போய் நின்றது தான் வரலாறு.அந்த வரலாற்றை நோக்கியே மீண்டும் செல்லாமல் புதியதொரு பாதையில், தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை, வெளிப்படுத்த வேண்டிய சூழல் இப்போது இருப்பதை மறுக்க முடியாது.அவ்வாறு மறுப்பவர்கள், மீண்டும் சிங்கள வேட்பாளர்களை வெற்றிபெற வைக்க முனைகிறார்கள் என்றே அர்த்தம்.

கிழக்கு நாகாலாந்து மக்களைப் போன்று தமிழ் மக்களின் வாக்குகளால் யாரும் வெற்றி பெறவதை விட, அவர்களின் வாக்குகளின் பலத்தை திரட்சியை வெளிப்படுத்துவது தான் முக்கியம்.அவ்வாறான ஒன்று குவிப்பு சிங்கள அரசுக்கு மாத்திரமன்றி, சர்வதேசத்துக்கும் ஒரு செய்தியைக் கூற வேண்டும். அது எப்படி என்பதை தீர ஆராய்ந்து முடிவெடுக்கலாம். ஆனால் அந்த முடிவு, கிழக்கு நாகாலாந்து மாநில மக்களைப் போல முகத்தில் அறைந்தால் போல இருக்க வேண்டும். அதனைச் சாதிப்பதற்கான வழியைத் தேட வேண்டிய பொறுப்பை தமிழ்க் கட்சிகள் தட்டிக்கழிக்க முடியாது.

**விளம்பர** தொடர்புகளுக்கு
**Mobile : +94 76 567 3339**

# உழைக்கும் தமிழ் மக்களின் விடுதலையே தமிழ் தேசியம்

## தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையின் மே தின வாழ்த்துக்கள்!

1860 ஆம் ஆண்டுகளின் இறுதியில் ஸ்காட்லாந்து நீதிமன்றத்திற்கு வந்த ஒரு வழக்கில் 3 தொழிலாளர்கள் ஒரு ரயில் விபத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்ததற்கு குற்றவாளிகள் இவர்கள்தான்“ என குற்றம் சாட்டப்பட்டு இருந்தனர். ஒருவர் அந்தரயில் பெட்டி இயக்கியவர். ஒருவர் அந்த சமிக்கைகளை தரவேண்டியவர். மற்றொருவர் அந்த ரயில் பெட்டிக்கு பாதுகாப்பாக வரவேண்டிய காவலாளி. அந்த வழக்கில் அந்த மூன்று பேரும் வைத்தவாதம் ஒன்றே ஒன்று தான். ஒருநாளைக்கு 14 மணி நேரத்திலிருந்து 20 மணி நேரம் வரைவேலை செய்து வந்த மூவரும், சில நேரங்களில் 40 முதல் 50 மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதன் காரணமாக அவர்கள் மயக்கமடைந்து இந்த விபத்து நேர்ந்தது என்று நீதி மன்றத்தில் தெரிவித்தனர்.

ஆம். உலகிலேயே நாங்கள் தான் நாகரீகம் அடைந்தவர்கள் என்று பெருமை பேசிய அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சிக்குப் பிறகு. தொழிலாளர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளில் ஒன்று தான் மேலே கூறிய வழக்கு. இதுபோன்ற நூற்றுக்கணக்கான நிகழ்வுகளை வரலாறு தனக்குள்ளே ஒளித்து வைத்திருக்கிறது.

உழைக்கும் வர்க்கத்தின் உழைப்பு என்ற உட்பொருள் இல்லாமல் இங்கு எந்த ஒரு உற்பத்தியும் நடப்பதில்லை என்கின்ற அடிப்படை பொருளியல் கோட்பாட்டை மறுத்து வந்த முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் உலகளாவிய தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும் வேலை செய்துவந்த உழைப்பாளர்கள் தங்கள் உழைப்புக்கான நேரக் கணக்கென்று ஒன்று இல்லாமலும், உழைத்த நேரத்திற்கு கூலியென்று ஒன்று கிடைக்காமலும் இருந்து வந்தகாலம் அது.

புரட்சியாளர் மார்க்ஸ், புரட்சியாளர் எங்கல்ஸ் போன்ற மாபெரும் தலைமைகளின் கீழ் புத்துணர்ச்சி பெற்ற தொழிலாளர் வர்க்கம் தங்களுக்கான வேலை நேரத்தை ஒரு நாளைக்கு 8 மணிநேரம் என வகுத்து தருமாறு அரசிடமும், முதலாளிய வர்க்கத்தினிடமும் கோரிக்கை வைத்திருந்தனர். அக்கோரிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்காவின் சிக்காகோ பகுதியில் உள்ள “ஹே சந்தை (Hay Market)“ என்னும் பகுதியில் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டத்தில் நடந்த காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் 4 தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன். தொழிலாளர்களின் தலைவர்களை பொய் குற்றம் சாட்டி தூக்கில் ஏற்றி முதலாளிய வகுப்பு தனது வெறியை தீர்த்துக் கொண்டது. இந்த மாபெரும் ஈக நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது தான் இன்று உலகம் முழுவதும் உழைக்கும் மக்கள் தங்கள் உரிமையை நாளாக கொண்டாடுகின்ற “மே தினம்“ என்று அழைக்கப்படும் “உலக உழைப்பாளர் தினம் ஆகும்.

வருடம் முழுவதும் நினைத்துப் பாராட்டப்பட வேண்டிய உழைக்கும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு

அடிமைப்படுத்தப்பட்ட உழைக்கும் வர்க்கம் தங்களின் உரிமைக்காகவும், நலனிற்காகவும் பல நூற்றாண்டுகளாகப் போராடி அடிமை விலங்கினை உடைத்தெறிந்து தமிழ்த்தேசிய உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும்.

உழைக்கும் தமிழ் மக்கள் சிங்கள அரச சியந்திரத்தோடு போராடி எமக்கான உரிமைகளை பெற்று எப்பொழுது விடுதலை பெறுகிறார்களோ அன்று தமிழ் தேசியம் நிலைபெறும் என தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை தனது தொழிலாளர் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

**வீழ்வது நாமாகினும் வாழ்வது தமிழாகட்டும்.**

**SCAN ME**

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.**

# தமிழர் மாநிலத்தில் பொது வாக்கெடுப்பு!


## அதை நோக்கிய நகர்வையே முன்னெடுத்துள்ளோம். நாடாளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன்

ஐக்கிய நாடுகள் போன்ற உலகக் கட்டமைப்புகளுடனும் எமது நிலையை அவர்கள் புரிந்துகொள்ளவும், இனிவருங்காலத்தில் இலங்கையின் வடக்கு - கிழக்கில் பொது மக்கள் வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபை நிகழ்த்தவும் உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் எமது நிலை பற்றிய ஒரு கைநூலை கொண்டிருக்கவும் ஏதுவாக “இலங்கையில் கட்டமைத்த இனவழிப்பும் தமிழ்மக்களின் இன சுத்திகரிப்பும்“ நூலை வெளியிட்டுள்ளோம் என தமிழ்மக்கள் கூட்டணியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இலங்கையில் கட்டமைத்த இனவழிப்பும் தமிழ் மக்களின் இன சுத்திகரிப்பும்“ என்ற ஆங்கிலமொழியில் அமைந்த நூல் நல்லூரிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத் தில் நேற்று மாலை வெளியிடப்பட்டது. இதன்போது விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதி பலிக்கும் ஆவணங்களாக இதுவரையில் இரண்டு முக்கியமான ஆவணங்கள் வெளிவந்துள்ளன. முதலில் 30 வருட அஹிம்சை வழிப் போராட்டத்தின் பின்னர் 1976ல் வெளியிடப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரகடனம். அடுத்து 30 வருட ஆயுதப் போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட வடமாகாணசபையின் 2015ஆம் ஆண் டின் இனவழிப்புத் தீர்மானம். தற்போதைய நூல் மேற்கண்ட இரு ஆவணங்களின் தொடர்ச்சியாகவே வெளியிடப்படு கின்றது.

இதன் உள்ளடக்கங்களை வாசித்து அறி பவர்கள் ஓரளவு எம் மக்களுக்கு இதுவரை நடந்த அநியாயங்களை, அட்டூழியங்களை புரிந்து கொள்வார்கள். எமது இந்த நூலின் குறிக்கோள் நடந்தவற்றைத் தெரியப்படுத்தலும் தெளிவான நடவடிக்கைகளை உலக அரங்கில் ஏற்படுத்தலுமா வென. சிங்களவர், தமிழர், புலம்பெயர்ந்தோர், சர்வதேச மக்களும் நிறுவனங்களும், அண்மைக்காலங்களில் இலங்கையில் நடந்தேறியவை எவை, யார் அவற்றின் சூத்திரதாரிகள், அவற்றை எவ்வாறு அவர்கள் நடத்தியுள்ளார்கள் என்று அறிந்து கொள்ளும் வகையில் அத்தியாயங்களை ஒழுங்குபடுத்தி தற்போதைக்குக் கிடைத்த விவரங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளார் ஆசிரியர்.மக்கள் யாவர்க்கும் எமக்கு நடந்தவற்றை நடப்பவற்றை தெரியப்படுத்துதல் இதன் நோக்கம்.பலர் நடந்தவற்றை அறியாமலேயே தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அது தவறு இந்நூலைப் படித்துவிட்டு அவர்கள் தம் கருத்துக்களை வெளியிடட்டும்.

அடுத்து பொறுப்புக்கூறல். நீதியைப் பெறுதல், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசத்துக்கு எடுத்தியம்பி வலியுறுத்தி எமக்கான பொது மக்கள் வாக்கெடுப்பை உறுதி செய்வது போன்றவையே எமது நோக்கம். பொதுவாக்கெடுப்பை தாமதமின்றி இயற் றுதல் அவசியம். ஏற்கனவே தமிழர்களின் வடக்கு - கிழக்கு பாரம்பரிய இடங்கள் பல பறிபோய் வேற்று இனத்தவர் அங்கு குடிகொண்டுள்ளார்கள். இங்கு நடக்கும் அரச மற்றும் அரச சார்புப் படைகள் மற்றும் வேற்று இனத்தவர்களின் நடவடிக்கைகளி னால் எமது மக்கள் பலர் வெளிநாடுகளைத் தஞ்சமடைந்து கொண்டிருக்கின் றார்கள். இப்படியே போனால் வாக்களிக்க தமிழ்மக்கள் இவ்விருமாகாணங்களிலும் மிகவும் குறைந்துவிடுவார்கள். இதை எண்ணியே இந்நூலை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் சர்வதேச நிறுவனங்க ளுக்கும் புலம்பெயர் எமது உறவுகளுக் கும் அறிமுகப் படுத்த எண்ணியுள்ளோம். இவ்வாறான ஒரு கைநூல் தமிழ் மக்கள் தமக்கு நேர்ந்த அவலங்களை அறிந்து கொள்ள மிகவும் உதவுகின்றது. இன்றைய காலகட்டத்தில் நாம் மூன்று பரிமாணங்களில் இருந்து நடப்பவற்றை நோக்க வேண்டியுள்ளது. பூகோளம் சார்ந்த கோணம் அடுத்து முழு இலங்கையினதும் பரிமாணக் கோணம். கடைசி யாக வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் தற்போதைய நிலை பற்றிய கோணம்.



உலகம மூன்றாவது உலக மகா யுத்தத்தை எதிர்நோக்கியுள்ளது. எம்மைப் பற்றி சர்வதேசம் வெகுவாகக் கரிசனை காட்ட முடியாத நிலையே பூகோளப் பரிமாணமாக இன்று உள்ளது. ஆனால் அவர்களுக்கு இங்கு நடந்தவற்றை, நடப்பவற்றைக் கூறிக் கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறு கனடா நாட்டில் எம்மவர் அறிவுறுத்தலின் மேல் அறிவுறுத்தல் கொடுத்துக் கொண்டு இருந்ததால்தான் இன்று அந்நாடு எமக்கு நடந்தவற்றைஉலக அரங்கில் எடுத்துக் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. அதே போல் நாம் பூகோ ளச் சமூகத்துக்கு எம்மைப் பற்றிய விவரங்களைத் திரட்டி அனுப்பக் கடமைப்பட்டுள் ளோம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் எம். நாடு வங்குரோத்து நிலையை அண்டித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. எம்மைப் பற்றியும் எமது பிரச்சினைகள் பற்றியும் மத்திய அரசாங்கம் பட்டும் படாமலேயே கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் தமிழர் பற்றிய யதார்த்த நிலையை எடுத்தியம்பும் எமது இந்த நூல் சிங்களத் தலைவர்கள், முக்கியமாக படித்த இளம் தலைமுறைகள், எம்மைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பு அளிக்க வல்லதாக உள்ளது. எம்மைப் பற்றிய மூன்றாவது பரிமாண நிலையில் இருந்து பார்த்தோமானால் இன்றைய படித்த தமிழ் இளைஞர், யுவதிகள் அண்மைக்

காலங் களில் தமது உள்ளூர் உறவினர்களுக்கு நேர்ந்த கதியை அறிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது. அவர்களுக்கு அறிவூட்டும் விதமாக இக்கைநூல் அமைந்துள்ளது-என்றார்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டும்

### அரசியல் கட்சிகளிடம் கரு ஜெயசூரிய கோரிக்கை



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகளின் நிலைப்பாட்டைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூற வேண் டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் மீண்டும் கருத்து வெளியிடடுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நீண்டகாலமாகவே நிறைவேற்று அதிகார ஜனா திபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதுதொடர்பில் பதவிக்கு வரு வதற்கு முன்னதாக அனைத்து வேட்பாளர்களும் வாக்குறு திகளை அளிக்கின்றபோதும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் அம்முறையை நீக்கு வது தொடர்பில் கரிசனைகளை வெளிப்படுத்துவதில்லை.

இவ்வாறான நிலையில் இவ் வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல்

நடைபெறவுள்ளது. நாம் நாடளாவிய ரீதியில் உள்ள சமூகக் குழுக்களுடன் உரையாடல்களைச் செய்து வருகின்றதன் அடிப்படையில் அனைத்தின சமூகங்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களை கொண்டிருப்பது புலப்படுகின்றது அந்தவகை யில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள் மக்களின் ஆணையைப் பெறுவதற்கு முன்னதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், அதற்கான கால வரையறை உள்ளிட்ட விடயங்களை வெளியிட வேண்டும். அதன் மூலமாக மக்கள் ஆணை பெற்று வருபவர்கள் நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறைமைய நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். என அவர் தெரிவித்தர்

## பொது வேட்பாளர் விவகாரத்தில் நேர்த்தியான தீர்மானமே தேவை!

### தமிழரசுக் கட்சிக்கு சுரேஷ் அறிவுறுத்தல்

தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான சரியானதொரு தீர்மானத்தை ஒன்று பட்டு எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டிருக்கிறது என்று ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் செலுத்தப்படவுள்ள வடக்கு கிழக்கு மக்களைச் சேர்ந்த 11 லட்சம் வாக்குகளையும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எடுக்க வேண்டிய தேவையுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தும் விடயம் தமிழ்மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான முயற்சி. ஜனாதிபதித் தேர்தல் இதற்கானதொரு களத்தைத் திறந்து விட்டுள்ள நிலையில் அதனை நாம் உரிய வகையில் பயன்படுத்துவது அவசியமானது. தமிழ் மக்களின் அதிக பட்சப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கின்ற தமிழரசுக் கட்சி இந்தக் களத்தை எவ்வாறு பயன்படுத்தப் போகிறது? என்ற கேள்வி எம்மத்தியிலுள்ளது. தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கின்ற ஒருசிலர் தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையற்றது என்ற அடிப்படையிலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்ட பின்னர்



யாருக்கு வாக் களிக்கலாம்? என்பதைத் தீர்மானிக்கலாம் என்ற வகையிலும் கருத்துகள் தெரிவிக்கின்றனர். தமிழ்மக்களின் இனப் பிரச்சினை தொடர்பில் சிந்திக்கக் கூடிய தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த வாய்ப்பினைத் தவறவிடக் கூடாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான இணக்கப்பாடு விரைவில் எட்டப்படுமென நம்புகின்றோம்.


## அடக்கி ஒடுக்கப்படும் தமிழ்த் தேசத்தின் அரசியல் அபிலாசைகளையும், உழைப்பாளர் உரிமைகளையும்



ஓரணி திரண்டு ஓங்கி ஒலிக்கும் தமிழ்த் தேசிய மேதினப் பொதுக் கூட்டம்.

காலம் – 01–05–2024. நேரம் – காலை 9 மணி .

இடம் – வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை மண்டபம்.


அனைவரும் வருக ஆதரவு தருக!!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# ஈழத் தமிழர்களின் அடையாள மனிதனை இழந்தோம்!

## சிவஞானம் சிறீதரன் தெரிவிப்பு



யாழ்.மண்ணின் பெரியவிளானில் பிறந்து, உலக அரங்கில் ஈழத்தமிழர்களுக்கான அடையாளத்தை ஆழப்பதித்த பெருமனிதன் திரு.நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த துயருற்றோம்.

பன்னாட்டு அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்க் கல்வியாளராக, சர்வதேச விளையாட்டு வீரராக, சமூக செயற்பாட்டாளராக என பல்துறை விற்பன்னராக விளங்கிய அவரின் மறைவு ஈழத்தமிழர்களின் அடையாள மனிதர்களுள் ஒருவரது மறைவாக அமைந்துள்ளது என்றே நான் கருதுகிறேன்.

1952 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலும், மூன்று ஆசியப் போட்டிகளிலும் இலங்கைக்காக விளையாடிய பெருவீரராக அடையாளம் பெறும் இவர், இலங்கையின் முன்னணி உயரம் பாய்தல் வீரராகவும், சாதனையாளராகவும் திகழ்ந்தவர். அனைத்துலகக் களப்போட்டியொன்றில் முதன்முதலாக இலங்கைக்கான தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொடுத்தவர் என்னும் வரலாற்றுப் பெருமையின் சொந்தக்காரர். 1958 இல் டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்று உயரம்பாய்தலில் புதிய ஆசிய சாதனையை நிறுவியதோடு, தங்கப்பதக்கத்தையும் பெற்றவர்.

விளையாட்டு வீரர் என்கிற அடையாளங்களைக் கடந்து, ஒரு கல்வியியலாளராகவும் தனித்துவம் பெற்று மிளிர்ந்தவர். இலங்கை, சியேரா லியோனி, பப்புவா நியூகினி மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் யுனெஸ்கோவிலும் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளமை தமிழர்களின் கல்வித்தரநிலை உயர்வுக்கான பெரும் சான்று எனலாம்.

மிக உயர்ந்த எண்ணங்களைக் கொண்ட, எளிதில் அணுகத்தகு சாதரண மனிதனாக விளங்கிய அவரின் இயல்புநிறை பண்புநிலையை, யாழ்.ஆனைக்கோட்டை யில் அவரை நேரில் சந்தித்த பொழுதொன்றில் அறிந்துகொண்டேன்.

தமிழ் மக்களின் அடையாளங்களை மீளநிறுவுவதாயின் அது அடுத்த தலைமுறையின் கல்விப்பாரம்பரியத்தால் மட்டுமே சாத்தியம் என்பதை அறிந்து, அதற்கான காரியங்களை ஆற்ற முனைந்திருந்தார். பல்துறைசார் நிபுணத்துவ ஆலோசகராக ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் உள்ளார்ந்த தீவிரத்தோடு செயலாற்றிய இவர் வடக்குக்கான "கல்விச் செயலணி" ஒன்றின் தோற்றத்துக்காக அயராதுழைத்தவர்.


தாய்த்தேசம் மீது அவர் கொண்டிருந்த பற்றும், விருப்புமே, தனக்குக் கிடைத்த தனிமனித அடையாளங்களையும் அங்கீகாரங்களையும் கூட இனத்துக்கான மூலதனமாய் மாற்றும் சிந்தனையை அவருக்குக் கொடுத்திருந்தது. அத்தகைய பெருமனிதனின் இழப்பால் துயருறும் அதேவேளை அவரின் ஆத்மா அமைதி பெறவும் பிரார்த்திக்கிறேன். அன்னாருக்கு எனது அஞ்சலிகள்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலி!

இந்திய படைகளின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து தன்னுயிர் நீத்த தியாகத் தாய் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு. வெள்ளி கிக்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளின்போது பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் ,கல்விசாரா ஊழியர்கள் ,மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் பங்குகொண்டு அன்னை பூபதிக்கு புகழ் வணக்கங்களை செலுத்தியிருந்தனர் .

# போதை ஊசி செலுத்தி பெண்ணொருவர் கூட்டு வன்புணர்வு!



தனக்கு போதை ஊசி செலுத்தி 10 பேர் வரையான கும்பல் பாலியல் வன்புணர்வுக்கு உட் படுத்தியது. அத்துடன், தன்னை சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கியது என்று 34 வயதான பெண் யாழ்ப்பாணம் காவல்துறையினரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

நல்லூருக்கு அண்மித்த பிரதேசத்தை சேர்ந்த 34 வயது பெண்ணே இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, குறித்த பெண் மனநல பிரச்னையால் பாதிக்கப்பட்டவர். இவரின், பெற்றோர் மரணமானதையடுத்து தனது மூத்த சகோதரியுடன் வடமராட்சியிலுள்ள காப்பகம் ஒன்றில் நீதிமன்ற உத்தரவின்படி தங்கவைக்கப்பட்டிருந்தார்.


இவரின் மூத்த சகோ தரி சென்ற ஆண்டு மார்கழி மாதம் உயிரிழந்தார். இதையடுத்து கடந்த தை மாதம் பெண்ணின் சகோதரன் அவரை தனது வீட்டுக்கு அழைத்து சென்றிருந்தார். சகோதரனின் வீட்டில் வைத்தே தனக்கு இந்தக்கொடுமை இழைக்கப்பட்டதாகவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 10 வரையான ஆண்கள் தனக்கு ஊசி செலுத்தி, சித்திரவதைகள் செய்து வன்புணர்வுக்கு உள்ளாக்கினர் என்றும் பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளார்.

அவரின் உடலில் சிகரெட்களால் சுடப்பட்ட அடையாளங்கள், தாக்கப்பட்டதற்கான தளும்புகள், தாக்கப்பட்டு கை முறிந்ததற்கான அடையாளமும் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.பாதிக்கப்பட்ட பெண், வடமராட்சியில் அவர் தங்கியிருந்த பாதுகாப்பு இல்லத்துக்கு சென்ற பின்னர், அங்கு தனக்கு நேர்ந்த கொடுமை களை குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் பருத்தித்துறை காவல்துறை முதல்கட்ட விசாரணைகளை நடத்தினர். சம்பவம் நடந்த இடம் யாழ்ப்பாணம் காவல்துறை நிலையத்துக்கு உட்பட்டது என்பதால் விசாரணைகளை அவர்களிடம் ஒப்படைத்தனர்.இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் காவல்துறை கடந்த திங்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.மேலும், இந்த வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட பெண் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்திய 10 பேரின் விவரங்களை வழங்கியுள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் காவல்துறை விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# புற்றுநோய்க்கான சிறந்த மருந்து தூக்கம் ஆய்வில் வெளியான முக்கிய தகவல்.

**உலகளாவிய ரீதியில் மிக வேகமாக பரவிவரும் நோய்களில் ஒன்றாக தற்போது புற்றுநோய் பதிவாகியுள்ளது. இந்த நோய் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும், சரியான தூக்கமின்மை புற்றுநோய் ஏற்படுவதற்கான முதன்மையான காரணியாக அமைந்துள்ளதென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.**

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் தூங்கிய சராசரி நேரத்தைவிட, இன்றைய மனிதர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் குறைவாக தூங்குகிறார்கள். போதுமான தூக்கமின்மை காரணமாக இதயநோய், நீரிழிவு நோய். உடல் பருமன். தொற்றுநோய்கள் மற்றும் புற்றுநோய் கூட ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.பகல் நேர தூக்கத்தை தவிர்த்து நாளொன்றுக்கு 6 மணி நேரத்திற்கும் குறைவாக இரவு தூங்கும் நபர்களுக்கு புற்று நோய் ஏற்படும் அபாயம் அதிகம் காணப்படுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டது.இந்த புற்றுநோயைக் கட்டுப்படுத்த தூக்கம் என்பது முக்கிய காரணி ஆகும். மெலடோனின் என்பது பினியல் சுரப்பி மூலம் மூளைக்கு வெளியிடப்படும் ஹார்மோன் அமைதியான தூக்கத்தை ஊக்குவிக்க. மக்கள் அதை இயற்கையான அல்லது செயற்கையான துணைப்பொருளாகவும் எடுத்துக் கொள்ளலாம்.உடலில், மெலடோனின் பல செயற்பாடுகளைச் செய்கிறது. ஆனால் இது முக்கியமாக சர்க்காடியன் ரிதங்களை பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்கது. சர்க்காடியன் ரிதம் என்பது உடலின் உள் கடிகாரம். எப்போது தூங்க வேண்டும். எப்போது எழுந்திருக்க வேண்டும் என்பதை



இது உடலுக்குஅறிவுறுத்துகிறது. இது புற்றுநோய் எதிர்ப்பு ஹார்மோன் கூட ஆகும். இரவு உறங்க செல்ல உகந்த நேரம் இரவு 10 – 11 மணி வரை என நிபுணர்கள் கருதுகிறார்கள். இரவு நேரத்துடன் தூங்கி காலை சூரிய உதயத்தின் போது சீக்கிரமே எழுவது உடலின் இயற்கையான சர்க்காடியன் ரிதமை சீராக்கவைக்க உதவி. ஆரோக்கியமான தூக்கம். விழிப்பு சுழற்சியை உறுதி செய்கிறது.இது புற்றுநோயிலிருந்து மட்டுமல்லாது ஏனைய நோய் களிலிருந்தும் உடலை காக்கக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருட்களுடன் 720 பெண்கள் கைதாகினர்!

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 720 பெண்களும் 13 ஆண்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 19 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள் ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையான 11 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 152 கிராம் ஹெரோயின், 1,133 கிராம் ஐஸ்,379 கிராம் கஞ்சா,16 கிராம் ஹெரோயின் மற்றும் 389 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# அம்மனுக்கு சாத்திய சேலை 1G இலட்சம் ரூபாவுக்கு ஏலம்!

## புங்குடுதீவு அம்மன் ஆலயத்தில்

புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவில் அம்மனுக்குச் சாத்தப்பட்ட சேலை 16 இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க புங்குடுதீவு கண்ணகியம்மன் தேவஸ்தானத்தின் முத்தேர் இரதோற்சவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.இதில் கண்ணகியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கு இடம்பெற்ற விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருளிய அம்பாள், உள்ளிட்டபரிவார தெய்வங்கள் பீடத்தில் வீற்றிருந்து முத்தேரேறி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகைதந்த பக்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இந்த நிலையில் கண்ணகியம்மன் தேர்த் திருவிழாவில் அம்மனுக்குச் சாத்தப்பட்ட சேலை ஒன்று ஏலத்தில் விடப்பட்டது.அந்த சேலையை பக்தர் ஒருவர் 16 இலட்சம் ரூபாவுக்கு வாங்கியுள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.


உடனடி வேலை வாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும்
தேசியம் வாராந்த பத்திரிகையை
நேரடி விநியோகம் செய்வதற்கு ஆண்/பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு: 0771499094-076 567 3339

# மறுக்கப்படும் உரிமை:

# தொடரும் கிழக்குத் தமிழர்களின் போராட்டம்!

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 1989ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் உப பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு இன்றுவரை முடியாமல்தான் இருக்கிறது. அப்படியானால் தமிழர்களுக்கு இருக்கும் அரசியல் அதிகார இயலுமை என்ன என்ற கேள்வியே கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலக விவகாரத்தில் எல்லோருக்கும் தோன்றும்.

பிரதேச செயலகத்தின் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும், கல்முனை பிரதேசத்தில், பரம்பரையாக வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளில் இருந்து விடுவிக்குமாறு கோரியும் மார்ச் 25ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு முன்னரும் பல தடவைகளில் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதனால் இதுவொன்றும் புதிதல்ல.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படாத காரணத்தினால் அப்பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்திற்கு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென நிதி ஒதுக்கப்படுவதில்லை என்பது போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளவர்களது கருத்து.

கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு) பிரதேச செயலக பிரிவு சுமார் 39,000 சனத்தொகையையும் 29 கிராம சேவகர் பிரிவுகளையும் 06 பாரம்பரிய தமிழ் கிராமங்களையும் உள்ளடக்கியதான ஒரு பிரதேச செயலகம். இந்நிர்வாக அலகானது 1989ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் 93/600/034 இலக்க 93.03.17 திகதிய, 93/600/034(1) இலக்க 93.03.31 திகதிய அமைச்சரவை மசோதாக்கள் மற்றும் 93.07.09ஆம் திகதிய அமைச்சரவை உப குழுவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 93.07.28ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியுடன் பிரதேச செயலகமாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில் தனியானதொரு பிரதேச செயலக பிரிவாக பொது மக்களுக்கான சேவைகளை வழங்கிவருகின்றது.

2002ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலகம் 2006ஆம் ஆண்டு முழுமையான பிரதேச செயலகமாக இயங்கிக் முடியுமாயின் 35 வருடங்களாக இயங்கும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் மாத்திரம் ஏன் தரமுயர்த்தப்பட முடியாது என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களது கருத்தும் வெளிவருகிறது. உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தியதுடன் பல்வேறு நிருவாக ரீதியான





முயற்சிகளையும் அரசியல்வாதிகள், கல்முனை சிவில் சமூகத்தினர் மேற்கொண்டிருந்தபோதும் இதுவரையில் எதுவுமே நடைபெறவில்லை.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக புளொட் அமைப்பின் உறுப்பினராக இருந்தபொழுது உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்தினார். 2019இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபொழுது ஜனாதிபதி தெரிவாகி ஒருவாரத்தில் கல்முனை தமிழ்ப்பிரிவு தரம் உயரும் என்று முழுக்கமிட்டார். கோட்டபாய அரசாங்கத்தில் அவரினால் கல்முனை பிரதேச செயலகத்தினைத் தரமுயர்த்திக் கொடுக்க முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச போய் இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கிறார். வியாழேந்திரன் அமைச்சராக இப்போதும் இருக்கிறார்.

அடுத்தவர், விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதியாக இருந்து அவ் அமைப்பிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்து பிரதி அமைச்சரான கருணா எனும் விநாயகமூர்த்தி முரளிதரன் கல்முனை விடயத்தில் பல உறுதிப்பாடுகளைக் கூறியிருந்தார். ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த தேர்தலில் கல்முனை தமிழ்ப்பிரிவினைத் தரமுயர்த்துவேன் என்ற தேர்தல் அறைகூவலுடனேயே போட்டியிட்டார். அவரது இந்த உறுதியை நம்பி வாக்களித்த மக்களுக்கு அம்பாரைக்கு தமிழ்ப்பிரதிநிதித்துவமே இல்லாமல் போனது. அதாவுல்லா நாடாளுமன்ற உறுப்பினராவதற்கும் வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்.

கல்முனை தமிழ்ப்பிரிவுக்கான துருப்புச் சீட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏதோ ஒரு வகையில் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழர் அரசியலில் அரசுடன் தமிழ்ப்பிரதிநிதிகள் இணைவதும், தமிழர்கள் இணைந்து அமைச்சர்களாக இருப்பதும் ஒன்றும் வரலாற்றில் நடக்காத ஒன்றல்ல. இருக்கும் வரைக்கும் இருப்போம் முடிந்த வரைக்கும் உழைப்போம். ஏதோ காலம் கடத்துவோம் என்று வாழும் அரசியல் வாழ்க்கைக்குப் பெயர் ஆளும் கட்சியென்று மகிழ்ச்சி கொள்வோம். தம்மால் முடியாமல் போனதற்கு தமிழ்த் தேசியத் தரப்பு மீது குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்களே தவிர வேறு ஒன்றும் நடைபெறவில்லை.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் பழம் பெரும் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசங்களாகும். அவ்வாறிருக்கின்ற அந்த எல்லைகளை கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்தோடு நிலஅளவை செய்து கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். கிராமங்களின் வீதிகளின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்த பிரதேசம் தற்போது இஸ்லாமாபாத் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள் கல்முனையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற விடயமாக இருக்கின்றன. நாட்டில் இருக்கின்ற நிருவாக நடைமுறைக்கு மாறாக இப் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் மோசடி நடைபெறுவதாகவே குற்றம்சாட்டப்படுகிறது.

கிழக்கில், மிகக் குறைவான கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்ற போதும், 29 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள கல்முனை வடக்கு உப பிரதேச செயலகமாகவே இருந்துவருகிறது. இது அம்பாரை மாவட்ட தமிழ் மக்களை மட்டுமல்ல, கிழக்கிலுள்ள தமிழ் மக்களனைவரையும் கவலைக்குள்ளாக்கும் செயலாகும்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் 1989இல் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இயங்கி 1993ஆம் ஆண்டு முதல் இற்றை வரை உப பிரதேச செயலகமாக இயங்குகிறது. காணி, நிதிவளம் அற்றதாக இயங்கும் இவ் பிரதேச செயலகத்திற்கு கணக்காளர் நியமிப்பு இதுவரையில் நடைபெறவில்லை. சாண் ஏற முழம் சறுக்கும் தமிழர் அரசியலில் சாத்தியங்கள் கடந்த நல்லாட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் வலுப்பெற்ற வேளை நாட்டில் ஏற்பட்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான முரண்பாடு, ஈஸ்ரர் தாக்குதல், பிரதமர் மாற்றம், ஆட்சிக்குழப்பம் உள்ளிட்ட பல அதனைக் குழப்பியடித்தது.

ஏற்கனவே 1993இல் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்து அவ்வேளையில் நாட்டில் ஏனைய பகுதிகளில் இருந்த உப பிரதேச செயலகங்கள் பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. அதற்குப் பின்னர் பல பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகமே நிறைவுபெறாத ஒன்று.


கல்முனை தமிழ்ப் பிரிவு 35 வருடங்களை தாண்டியும் நிறைவேறாத கனவாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதனை வைத்தே முஸ்லிம் அரசியல்வாதிகளும், சில தமிழ் அரசியல்வாதிகளும் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள். காலத்தையும் கடத்துகிறார்கள். மக்களையும் ஏமாற்றுகிறார்கள். ஆனால், யதார்த்தத்தினைச் சொல்வதற்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்தான் ஆட்களில்லை. அந்தவகையில், கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகம் தொடர்பில் அரசியல் தலைவர்களது நடவடிக்கைகள் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை குலைப்பதாகவே அமைந்திருக்கிறது. இனவிரோதம் வலுத்தேவிட்டது.


அதன் தொடர்ச்சியாகத்தான் கல்முனையில் உருவாகியிருக்கின்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் வழங்கப்படாமல் திட்டமிட்டு தடுக்கப்படுவது கவலையானதே. இவ்வாறான சம்வங்களும் இன முறுகல் நிலைகளும் உருவாகாமல் தடுக்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களை வழங்கி மக்கள் தங்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பாதிப்பின்றியும் பெறுவதற்கு அரசாங்கம் தீர்வைக்காண வேண்டும்.

அடிக்கடி ஒரு பொறி விழுவதும், அது பெருந்தீ யாகப் பற்றி எரிவதும் பின்னர் தானாக அணைவதுபோன்று ஆகிவிடுவதும்தான் தமிழ் மக்களின் நிலைப்பாடு. 'பிட்டும் தேங்காய்ப்பூவும் போல' என்று பொது வெளியில் பேசிக்கொண்டு உள்ளே வேறுவிதமாகச் செயற்படும் பாங்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம்களுக்கிடையில் இருக்கிறது என்பது வெளிப்படை. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே அனைவருடையதும் கனவு நிலைப்பாடாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை உருவான வேளை சிறுபான்மை, தமிழ் என்றிருந்த தமிழ் முஸ்லிம் மக்கள் காலபோக்கில் பிரிந்து இருதுருவங்களானார்கள். அதன் பின்னர்தான தமிழ்பேசும் என்று மாற்றம் பெற்றது. அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் இப்போதும் தமிழர் தரப்பு அவற்றையெல்லாம் மறந்து சகோதரர்களாக வாழ்வோம் என்றே சொல்கிறார்கள். முயற்சி செய்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீராத நம்பிக்கையாக இருக்கின்ற முஸ்லிம்களின் இணக்கப்பாட்டுடன் கல்முனைத் தமிழ்ப்பிரிவு பற்றிய பிரச்சினை முடிவுக்குவர வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு -உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படாத காரணத்தினால் அப்பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் இது வெறுமனே கல்முனைத் தமிழர்களின் பிரச்சினை, கிழக்குத் தமிழர்களது பிரச்சினை என்ற மட்டுப்பாடுகளுடன் பார்க்கப்படுவது நிறுத்தப்பட்டு ஒட்டுமொத்த வடக்கு கிழக்குத் தமிழர்களின் பொதுமையான பிரச்சினையாகப் பார்க்கப்படவும் வேண்டும்.






– இலக்குவன் –

# அனுர குமாரவிடம் சில கேள்விகள்







நிலாந்தன்

ஒரு நண்பர்,அவர் ஒரு இலக்கியவாதி, தொலைபேசியில் அழைத்தார். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் அவரைப் பதட்டம டையச் செய்திருப்பதாகத் தெரிந்தது. பொது வேட்பாளர் என்ற தெரிவை அவர் கடுமை யாக விமர்சித்தார். இனங்களுக்கு இடையே அது முரண்பாட்டைப் பெருப்பிக்கும் என்ற பொருள்படவும் அவர் கதைத்தார். அதாவது சம்பந்தன், சுமந்திரன் மற்றும் சில விமர்சகர கள் கூறுவதை அவர் பிரதிபலித்தார். அதைவிட முக்கியமாக கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தான் ஜேவிபிக்கு வாக்களித்ததாகவும் கூறினார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஜேவிபிக்கு இருந்த கவர்ச்சியை விடவும் இப்பொழுது குறிப்பாக 2021 இல் நிகழ்ந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னர் ஜேவிபியின் கவர்ச்சி அதிகரித்திருக்கிறது என்பது உண்மை. எனவே அந்த இலக்கிய நண்பர் இந்த முறையும் ஜேவிபிக்குத்தான் வாக்க ளிக்க போகின்றார் என்று தெரிகிறது. அவ ரைப் போன்றவர்களை மயக்கக்கூடிய பேச் சாற்றலும் ஜனவசியமும் அனுரகுமாரடவிம் உண்டுதான்.

யாழ்ப்பாணத்திலும் கனடாவிலும் இனப்பிரச் சினைக்கான தீர்வு தொடர்பிலும் இன முரண்பாடுகள் தொடர்பிலும் இன நல்லிணக் கம் தொடர்பிலும் அனுரகுமார ஆற்றிய உரைகள் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக லிபரல் ஜனநாயக வாதிகள் மத்தியில் அதிகம் கவனிப்பை பெற்றிருக்கின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டு,கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, சிவில் சமூக செயற்பாட்டாளரும் சட்டச் செயற்பாட்டாளரும் ஆகிய நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார்,ஜேவிபியை ஆதரிப் பதன் மூலம் தென்னிலங்கை அரசியலில் தாக்கம் செலுத்த முடியுமா என்று.

அப்பொழுது இருந்ததைவிடவும் இப் பொழுது. ஜேவிபியின் மவுசு கூடிவிட்டது. இரண்டு பிரதான கட்சிகளையும் விட ஜேவிபி பரவாயில்லை என்று சிங்கள மக்கள் மத்தி யில் படித்த நகர்ப்புற நடுத்தர வர்க்கம் கருது கிறது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான எதிர்பார்ப்பு உண்டா?

உண்டாயின்.அவ்வாறான எதிர்பார்ப்பு உள்ளவர்கள் பின்வரும் கேள்விகளுக்கு ஜேவிபி என்ன பதில் கூறுகிறது என்பதைக் கேட்டுத் தமிழ் மக்களுக்குக் கூறுவார்களா?

முதலாவது கேள்வி, இலங்கை இனப் பிரச்சினை என்பது இலங்கைத் தீவின் பல் வகைமையை ஏற்றுக் கொள்ள மறுத்ததில் இருந்துதான் தொடங்கியது. இலங்கைத் தீவின் பல்வகைமை எனப்படுவது இச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களும் ஒன்றுக்கும் மேற்பட்ட மதங்களும் ஒன்றுக் கும் மேற்பட்ட மொழிகளும் உண்டு என்பது தான். இந்த பல்வகைமையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சிங்கள பௌத்த பெருந் தேசிய வாதம் அதாவது பெரிய இனம் ஏனைய சிறிய இனங்களின் தேசிய இருப்பை அழிக்க முற்பட்டமைதான் இனப் பிரச்சினை யாகும். எனவே இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஜேவிபி ஏற்றுக் கொள்கின்றதா? ஆயின் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதனை ஜேவிபி ஏற்றுக் கொள்கின்றதா? ஆயின் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதனை ஜேவிபி ஏற்றுக் கொள்கின்றதா? இது முதலா வது தொகுதிக் கேள்விகள்.

அனுரகுமார கூறுகிறார் தமிழ் மக்களுக்கு மொழிப் பிரச்சினை, வழிபாட்டுப் பிரச்சினை, பாதுகாப்புப் பிரச்சினைகள் போன்ற பல பிரச்சனைகள் உண்டு என்று. உண்டுதான். ஆனால் அவையனைத்தும் தமிழ் மக்களின் கூட்டு உரிமைக்குள் அடங்கும். தமிழ் மக் களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு அவர்களுடைய கூட்டுரிமையைப் பாதுகாக் கும் ஒரு தீர்வை முன் வைத்தால் பிரச்சனை தீர்ந்து விடும். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்வதுதான்.இந்த அடிப்படையில் இரண்டாவது தொகுதிக் கேள் விகளைக் கேட்கலாம்.


இனப் பிரச்சினைக்கு ஜேவிபி முன் வைக் கும் தீர்வு என்ன? தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்றார்களோ இல்லையோ மஹிந்த கூறுகிறார் 13 பிளஸ் என்று. ரணில் கூறு கிறார் 13 என்று. சஜித் கூறுகிறார் 13 பிளஸ் என்று. இந்த விடயத்தில் ஜேவிபி தமிழ் மக்களுக்கு முன் வைக்கும் தீர்வு என்ன?

ஏனைய பெரிய கட்சிகளை விடத் தன் கை சுத்தம் என்று ஜேவிபி கூறுகின்றது. ஊழலற்ற, முறைகேடுகளற்ற, குடும்ப ஆதிக்கம் அற்ற ஒரு ஆட்சியைத் தன்னால் தர முடியும் என்று வாக்குறுதி அளிக்கின்றது. ஆனால் ஊழலும் முறைகேடும் குடும்ப ஆட்சியும் எங்கிருந்து வந்தன? இலங்கைத் தீவின் ஜனநாயக இதயம் எங்கே தோல்வி அடைந்தது? இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்த போது தான்.அதாவது இனப்பிரச்சினைதான் நாட்டின் எல்லாப் பிரச்சினைகளுக்குமான தாய்ப் பிரச்சனை. அதை ஜேவிபி ஏற்றுக் கொள்கிறதா? ஆயின் அதற்கு அவர்கள் முன்வைக்கும் தீர்வு என்ன? ஏனைய கட்சிகளை விட வித்தியாசமான ஒரு தீர்வை அவர்கள் முன்வைப்பார்களா? அதைப் பகிரங்கமாக சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக் கூற ஜேவிபி தயாரா?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுடைய பாரம்பரியத் தாயகம் ஆகிய வடக்கு கிழக்கு இணைப்பை ஜேவிபி ஏற்று கொள்கின்றதா? ஏற்கனவே வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக வழக்கு போட்டு சட்டரீதியாக அந்த இணைப் பை பிரித்தது ஜேவிபிதான். அதற்காக ஜேவிபி தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்குமா? அல்லது தான் செய்தது சரி என்றால் அதற்குரிய விளக்கத்தை ஜேவிபி பகிரங்க மாகக் கூறுமா? அதாவது ஜே விபி பகிரங்க மாக பொறுப்புக் கூறுமா?

இவை இரண்டாவது தொகுதி கேள்விகள். மூன்றாவது தொகுதி கேள்விகள் வருமாறு யுத்த காலத்தில் ஜேவிபி படைத்தரப்புக்கு ஆட்சேர்த்துக் கொடுத்தது. போர் வெற்றி களைக் கொண்டாடியது.ஆனால் தமிழ் மக்கள் அந்த வெற்றிகளை இனப்படுகொ லை என்று வர்ணிக்கின்றார்கள். இது தொடர்பாக ஜேவிபியின் நிலைப்பாடு என்ன? அவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசாங் கத்தைப் பொறுப்புக் கூற வைக்கும் பொறி முறை ஒன்று ஐநாவில் செயற்பட்டு வருகின்றது. போரை ஆதரித்த. போரை வழி நடத்திய அனைவரும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஜேவிபி பொறுப்பு கூறுமா?

நான்காவது கேள்வி, ஜேவிபியானது அதன் முதலாவது ஆயுதப் போராட்டத் தின்போது புதிதாக இணைக்கும் அங்கத்த வர்களுக்கு நடத்திய அரசியல் வகுப்புகளில் ஐந்தாவது வகுப்பில் மலையகத் தமிழர்க ளை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவி கள் என்று விவரித்தது. ஜேவிபி இப்பொ ழுதும் அதே நிலைப்பாட்டோடு தான் காணப் படுகின்றதா? இந்த விடயத்தில் மலையக



மிகுதி 11 பக்கம் பார்க்க...

# உண்ணாவிரதமும் பெண் உரிமையும்!

## அமெரிக்க பெண் உரிமை போராட்டங்கள்!

# ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகம்!



-நவீனன்-

உலக வரலாற்றில் பெண்களின் உரிமைக் காக உண்ணாவிரத போராட்டங்களை மேற்கொண்டு, தங்கள் கோரிக்கைகளை வென்றுள்ளனர். அமெரிக்க பெண் உரிமை போராட்டத்தில் பெண்கள் எடுத்துக் கொண்ட ஆயுதம் உண்ணாவிரதமாகும். இதற்கு ஒப்பாக ஈழத்தில் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போராட்டம் உயிரீகத்தின் உச்சமாக விளங்குகிறது.

**அமெரிக்க பெண் உரிமை போராட்டம்:**

அலஸ் ஸ்டோக்ஸ் பால் (Alice Stokes Paul) ஓர் அமெரிக்க பெண்ணியவாதியும், பெண்கள் உரிமை ஆர்வலர் ஆவார். அமெரிக்க அரசியலமைப்பின் பத்தொன் பதாம் திருத்தத்திற்கான பிரச்சாரத்தின் முன்னணி மூலோபாயவாதிகளில் இவரும் ஒருவர்.

அக்காலத்தில் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட பெண் வாக்களிக்கும் உரிமைக் காகவும் பாலின பாகுபாட்டை எதிர்த்து அலஷ் பால், லூசி பர்ன்ஸ் மற்றும் பிறருடன் இணைந்து, பெண் வாக்குரிமை போராட்டங் களை முன்னின்று நடாத்தியவர்.

உரிமைக்கான பெண்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடிய தன் வெற்றிகரமான பிரச்சாரத்தின் மூலம் அமெரிக்காவில் பிரபல்யமானார். இதன் விளைவாக ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

1885 இல் நியூ ஜெர்சியில் பிறந்த அலஷ் பால், (ஜனவரி 11, 1885 – ஜூலை 9, 1977) தன் சிறு வயதிலிருந்தே பெண்களுக்கான வாக்குரிமை நிகழ்வுகளில் கலந்து கொண் டார். அவர் சமூகப் பணியைப் படித்தாலும், குடியேற்ற வீடுகளில் ஏழைகளுக்குச் சேவை செய்தாலும், பெண்களுக்கான உரிமைக்காக சமூகப் பணியை தொடர்ந்து மேற்கொண் டார். உயர் கல்வியில் அவர் உயிரியல் மற்றும் சமூகவியலில் பட்டங்களை முடித்த பிறகு, பொருளாதாரம் மற்றும் சமூகவியலில் தனது படிப்பைத் தொடர 1907 இல் பிரிட்டனுக்குச் சென்றார்.

அவர் பிரிட்டனில் பெண்கள் சமூக மற்றும் அரசியல் ஒன்றியத்தில் (WSPU) சேர்ந்து, பெண்களின் சம உரிமைகளுக்காக ஊர்வ லங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் ஒத்துழையாமை ஆகியவற்றில் பங்கேற் றார். இதன் விளைவாக, அவரும் பிரிட்டனில் உள்ள மற்ற பெண் வாக்குரிமையாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர்.

**பெண் வாக்குரிமைக்காக போராட்டம்:**

பெண்களின் வாக்குரிமைக்காக Emmeline மற்றும் Christabel Pankhurst தலைமையில், WSPU உறுப்பினர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி சிறையில் தங்கள் கட்டாய சிகிச்சை , உணவு அருந்துதலை எதிர்த்தனர்.

உண்ணாவிரத போராட்டங்கள் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக மாறியது. ஏனெனில் அவை கூடுதல் தாக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது. அதே காரணத்திற்காக மக்களிடம் அனுதாபத்தை பெரிதும் உருவாக் கியது.

1910 ஆம் ஆண்டில், பால் கிரேட் பிரிட்டனில் இருந்து அமெரிக்கப் பெண்களுக்கான சட்ட மற்றும் பொருளாதார சமத்துவத்திற்காக வேலை செய்யத் திரும்பினார், தேசிய அமெரிக்க பெண் வாக்குரிமை சங்கத்தில் (NAWSA) சேர்ந்தார். 1890 மற்றும் 1910 க்கு இடையில், மாநில வாரியான மூலோபா யம் சில மேற்கு மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தெருக் கூட்டங்கள், அணி வகுப்புகள் மற்றும் மறியல் போராட்டங்கள் உட்பட இங்கிலாந்தில் அவர் பங்கேற்றது போன்ற தேசிய அளவில் போர்க்குணமிக்க எதிர்ப்பு உத்திகளுக்கு மாற வேண்டியது என்று அலஷ் பால் நம்பினார்.

**பெண் உரிமைக்காக உண்ணாவிரதம்:**

இந்த அகிம்சை நடவடிக்கைகள் அனைத் தும் பெண்களின் தலைமை சரியான கிளர்ச் சியை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந் தது. 1913 மார்ச் 3 ஆம் தேதி பெண் வாக்குரிமை ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்தனர். 8,000 க்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஊர்வலத்திற்காக அணிவகுத்துச் சென்றனர்.

அமெரிக்காவில் பெண் உரிமைக்காக ஊர் வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடி யதன் மூலம் ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

**ஈழத்தில் அன்னை பூபதி :**

ஈழத்தில் கோரமான போர் தீவிரம் அடைந் திருந்த 1988இல் உடனடியாக போர் நிறுத் தத்தை நடைமுறைப்படுத்தி, பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டி, அறப் போராட்டங்க ளை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

31 நாள் நோன்பிருந்த பத்துப்பிள்ளைகளின் தாயான அன்னை பூபதி மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளர்.பூபதியம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை.

அன்னை பூபதி (நவம்பர் 3, 1932 – ஏப்ரல் 19, 1988), மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக சாகும் வரை உண்ணா நிலையிருந்து உயிர் நீத்தவர்.




விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

உடனடியாக போர் நிறுத்தத்தை நடை முறைப்படுத்த வேண்டும். போரிடும் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும். இந்திய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தையின் பின்னர் அன்னையர் முன்ன ணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988ம் ஆண்டு ஜனவரி 4 ம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட வில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது.

1988 ம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் தேதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிக ளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறியவே சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

**அன்னையர் முன்னணி போராட்டம் :**

அப்போது பலர் சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார்.

1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் அன்னம்மாவின் உண்ணாநோன்புப் போராட்டம் தொடங்கியது. ஆனால் படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

**அன்னைபூபதி போராட்டம் :**

இந்த நிலையில் தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை மார்ச் 19 1988 இல் தொடங் கினார். முன்னெச்சரிக்கையாக "சுயவிருப் பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி வைத்தார்.

பத்துப்பிள்ளைகளுக்கு, தாயார் இவர். நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல் கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார்.

அன்னை பூபதியின் நினைவுநாள் ஈழத்தில் நாட்டுப்பற்றாளர் நாளாக என்றும் நினைவு கூறப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் பெண்கள் அடக்கு முறைகளை எதிர்க்க உண்ணாவிரதப் போராட்டத்தை ஓர் எழுச்சி வடிவமாகவே கருதி போராடி இருக்கின்றனர். உயிரீகத்தின் உச்சம் தொட்ட அன்னை பூபதியம்மா ஈழ மண்ணில் தன் உயிர்க் கொடையால் தியாகத் தாயாக என்றும் விளங்குகின்றார்.










# கிழக்கில் சிவந்த சுவடுகள்...

தொடர்.. 5



## திருகோணமலையிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள்!




மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தென்கிழக்கு பகுதியை பிரித்தெடுத்து திகாமடுல்ல என்ற ஒரு மாவட்டத்தை உருவாக்கி அதனை சிங்கள மயமாக்கியதை போல தமிழர் தாயகத்தின் தலைநகர் என சொல்லப்படும் திருகோணமலை மாவட்டத்தையும் சிங்கள மயமாக்க முற்பட்டனர். அதில் சிங்கள அரச தரப்பு வெற்றிபெற்று விட்டது என்றே சொல்ல வேண்டும்.

தமிழர்கள் தமது தாயகப்பூமி என சொல்லும் வடக்கு கிழக்கை புவியியல் ரீதியாக பிரிப்பதற்கான முயற்சிகள் திருகோணமலை முல்லைத்தீவு எல்லைப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது. தான் மணலாறு பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை உருவாக்கி வெலிஓயா என பெயரை மாற்றி அப்பிரதேசத்தை அனுராதபுர நிர்வாக மாவட்டத்துடன் இணைப்பதால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிலத்தொடர்பற்று துண்டாடப்படும். இதற்காகவே மணலாற்றில் சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டன.

திருகோணமலை மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்கு எல்லையான தென்னமரவாடியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையான வெருகல் ஆறு வரையான நீண்ட கரையோர பிரதேசமாகும். இதன் தெற்கு எல்லையாக அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்கள் உள்ளன.

1827 ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் 250 சிங்களவர்கள் மட்டுமே வாழ்ந்தனர். அப்போது தமிழர்கள் 15,663 பேராகவும், முஸ்லீம்கள் 3,245 பேராகவும் காணப்பட்டனர். இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் தமிழர்கள் 81.76 வீதமாகவும், முஸ்லீம்கள் 16.9 வீதமாகவும், சிங்களவர்கள் 1.3 வீதமாகவும் காணப்பட்டனர்.

1921ம் ஆண்டில் தமிழர்களின் சனத்தொகை 54.4 வீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, முஸ்லீம்களின் சனத்தொகை 37.6 வீதமாகவும் சிங்களவர்களின் சனத்தொகை 4.4 வீதமாகவும் உயர்வடைந்திருந்தது.

1971 ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை முடிவுகள் சிங்கள குடியேற்றம் மற்றும் முஸ்லீம்களின் சனத்தொகை அதிகரிப்பு என்பனவற்றை தெளிவாக காட்டியிருக்கிறது. அந்த ஆண்டின் குடித்தொகை மதிப்பீட்டின் படி திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் (71749பேர்) 38.1 வீதமாகவும் முஸ்லீம்கள் (59924 பேர்) 31.8 வீதமாகவும், சிங்களவர்கள் (54,744 பேர்) 29.08 வீதமாகவும் காணப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 1.3 வீதமாக இருந்த சிங்களவர்கள் 2012ஆம் ஆண்டு குடிதொகை மதிப்பீட்டின் படி 26.9 வீதமாகவும், 16 வீதமாகவும் இருந்த முஸ்லீம்கள் 40.4 வீதமாகவும் உயர்வடைந்திருக்கிறார்கள். 81.76 வீதமாக இருந்த தமிழர்கள் 32.2 வீதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள். யுத்தம் காரணமாகவும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழர்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாகவும், யுத்த அழிவுகளினால் ஏற்பட்ட இறப்புவீத அதிகரிப்பும் தமிழர்களின் சனத்தொகை வீழ்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும்

சனத்தொகையில் மட்டுமல்ல நிலப்பரப்பைக்கூட தமிழர்கள் திருகோணமலையில் இழந்துவிட்டார்கள். 2728 சதுர கிலோ மீற்றரை கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் 346 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் தான் தற்போது தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். திருகோணமலை நகர் மற்றும் ஈச்சலம்பற்றை, வெருகல் உள்ளடக்கிய இந்த 346 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்திற்குள்ளும் தற்போது சிங்களவர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

பூர்வீக தமிழ் பிரதேசங்களான கந்தளாய், கிண்ணியா, குச்சவெளி, தம்பலகாமம் பகுதிகள் இப்பொழுது முற்றுமுழுதான சிங்கள பிரதேசங்களாக மாற்றப்பட்டுவிட்டது. அந்த பிரதேசத்தில் உள்ள சுமார் 240 தமிழ் கிராமங்களின் பெயர்கள் சிங்கள பெயர்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.திருகோணமலை பிரதேசத்திலிருந்து தமிழர்களை வெளி யேற்றுவதற்காக சிறிலங்கா படையினரும் முஸ்லீம் ஊர் காவல் படையினரும் தமிழர்களை படுகொலை செய்ய ஆரம்பித்தனர்.

1984 மற்றும் 1985ஆம் ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்கள் பலவற்றில் படுகொலைகள் நடைபெற்றன.

### தென்னமரவாடி படுகொலை

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான தென்னைமரவாடி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான மணலாறு ஆகிய கிராமங்களில் 1984ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தி அக்கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட துயரமான சம்பவம் இடம்பெற்றது.

1984ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி ஆயுதம் தாங்கிய படையினர் தென்னமரவாடி கிராமத்திற்குள் புகுந்து பெண்கள் உட்பட 15பேரை படுகொலை செய்தனர். இதனையடுத்து அக்கிராமத்தில் இருந்த நூற்றி இருபத்தைந்து குடும்பங்களும் அங்கிருந்து வெளியேறினர். அதேபோன்று தென்னமரவாடி கிராமத்தின் அயல் கிராமமான அமரவயல் கிராமத்திலிருந்தும் படையினரின் அச்சுறுத்தல் காரணமாக மக்கள் வெளியேறினர். சுமார் 35 வருடங்களாக அகதிகளாக இருந்த தென்னமரவாடி மக்கள் தற்போது தமது பூர்வீக கிராமத்தில் குடியேறியிருக்கின்ற போதிலும் அவர்களுக்கான இருப்பிட வசதிகளோ உட்கட்டமைப்பு வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை.

### திருகோணமலை படுகொலை

திருகோணமலை நகரிலிருந்து தமிழர்களை வெளியேற்றும் நோக்குடன் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் திகதி சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல் படையினரும் சிங்கள ஊர்காவல் படையினரும் ஈடுபடுத்தப்பட்டனர். விமானப்படையினர் ஹெலிகொப்டர்கள் மூலம் தாக்குதல் நடத்திய அதேவேளை கடற்படையினர் கடலிலிருந்து தமிழ் கிராமங்களை நோக்கி எறிகணை தாக்குதல்களையும் நடத்தினர்.

கனரக வாகனங்கள் சகிதம் ஊருக்குள் நுழைந்த இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இச்சுற்றிவளைப்பு தாக்குதல் செப்டம்பர் 9ஆம் திகதிவரை 5 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது. திருகோணமலை நகரில் மத்திய வீதி, பிரதான வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி உட்பட தமிழர்களின் பூர்வீக கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த 5 நாட்களிலும் 25 பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். சுமார் 1500க்கு மேற்பட்ட வீடுகளும் தமிழர்களின் வர்த்தக நிலையங்களும் அழிக்கப்பட்டன.

இத்தாக்குதல்களை அடுத்து திருகோணமலை நகரிலிருந்த தமிழ் மக்கள் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்து அங்கிருந்து படகுகள் மூலம் தமிழ் நாட்டிற்கு இடம்பெயர்ந்தனர். சிலர் திருகோணமலையிலிருந்து நேரடியாக படகுகள் மூலம் தமிழ்நாட்டிற்கு அகதிகளாக சென்றனர். இவ்வாறு தமிழ்நாட்டிற்கு அகதிகளாக சென்ற சிலர் இன்னமும் தமது சொந்த இடத்திற்கு திரும்பவில்லை.

### கிளிவெட்டி படுகொலை

கிளிவெட்டி கிராமம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பூர்வீக தமிழ் கிராமங்களில் ஒன்றாகும். 1976ஆம் ஆண்டு சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட சேருவில தொகுதி உருவாக்கப்பட்ட போது அத்தொகுதியில் இத்தமிழ் கிராமமும் உள்ளடக்கப்பட்டது. சேருவில தொகுதியிலிருந்த தமிழ் கிராமமான கிளிவெட்டியிலிருந்து தமிழர்களை வெளியேற்றும் நோக்குடன் சிங்கள காடையர்களும் இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் தொடர்ச்சியாக தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

1985 ஆண்டு யூன் முதலாம் திகதி மாலை 2மணியளவில் இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் கிளிவெட்டி கிராமத்தை சுற்றிவளைத்தனர். 4 பெண்கள் உட்பட 10பேர் அங்கு வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். வீடுகளுக்கு தீவைத்தனர். சுமார் 125 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலானது. 13பேரை கைது செய்து தெகிவத்தையில் இருந்த இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர். இவர்களில் 5 பேர் பெண்களாகும். ஆண்கள் அனைவரும் இராணுவ முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததாக சர்வதேச மன்னிப்புச்சபை தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இச்சம்பவம் நடைபெற்ற அடுத்த நாள் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற பயணிகள் பஸ் மீது படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதில் 13 பயணிகள் கொல்லப்பட்டனர். 9 பொதுமக்கள் காயமடைந்தனர்.

1985 யூன் 3ஆம் திகதி இராணுவத்தினரின் துணையுடன் ஊர்காவல் படையினர் மூதூருக்கும் கிளிவெட்டிக்கும் இடையில் உள்ள கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தினர். வீடுகளுக்கு தீவைத்தனர்.இச்சம்பவத்தில் 35 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அரிப்பு, பூநகர், பெருவெளி, பாரதிபுரம், லிங்கபுரம், ஈச்சிலம்பற்று, கருக்கல்முனை, மாவடிச்சேனை, முத்துச்சேனை, வாழைத்தோட்டம், மேன்காமம், கங்குவெளி, பட்டித்திடல், பாலத்தடிசேனை, ஆகிய 14 கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு தீவைத்து அக்கிராமங்களிலிருந்து மக்களை வெளியேற்றினர்.

1985 யூன் முதலாம் திகதியிருந்து 14ஆம் திகதி வரையான இரு வாரங்களில் இக்கிராமங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 1500 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சுமார் 4 ஆயிரம் பொதுமக்கள் தமது கிராமங்களிலிருந்து வெளியேறினர்.

### திரியாய் படுகொலை

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் கிராமத்தின் மீது 1985 யூன் 8ஆம் திகதி அதிகாலை விமானப்படையினர் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தினர். மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலை கட்டிடங்களில் தஞ்சமடைந்தனர்.அதன் பின்னர் அக்கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் வீடுகளுக்கு தீவைத்தனர். திரியாய் பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த 10பேரை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். அக்கிராமத்தில் முக்கிய பிரமுகர்களாக இருந்தவர்களை தெரிவு செய்து அவர்களை பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக்கொன்றனர்.சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் திரியாய் கிராமத்தின் இளைப்பாறிய கிராம அலுவலர் க.நாராயணபிள்ளை, திரியாய் ப.நோ.கூ. சங்க தலைவர் கே.துரைநாயகம், திரியாய் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன செயலாளர் கே.ஏகாம்பரம், திரியாய் உயர்தரப்பாடசாலை அதிபர் பி.மகாதேவா ஆகியோரும் அடங்குவர்.நிலாவெளி அகதிகள் முகாம் படுகொலை திருகோணமலை நகரிலிருந்து 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள நிலாவெளியில் 1983ஆம் ஆண்டு கலவரங்களை அடுத்து இடம்பெயர்ந்தவர்களுக்கான அகதி முகாம் அமைக்கப்பட்டிருந்தது. 1985ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் திகதி இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் அகதி முகாமை சுற்றி வளைத்தனர். அகதி முகாமில் இருந்த 30 பேரை பொது வெளி ஒன்றில் வைத்து சுட்டுக்கொலை செய்தனர்.

மிகுதி 11 பக்கம் பார்க்க...

# பல்கலை வாழ்வில் மறக்க முடியாத பயணம்!




யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கு மலையகம் நோக்கிப் பயணிக்க வேண்டும் என்கின்ற ஆசை எப்போதுமே உள்ளத்தில் இருந்து கொண்டே தான் இருக்கும். எப்போதுமே வெப்பமான காலநிலையே யாழ்ப்பாணத்தில் நிலவி வருவதால் கொஞ்சம் குளிரான சூழ்நிலையில் வாழ வேண்டும் என்கின்ற ஆசை யாருக்குத்தான் இல்லாமல் இருக்கும். அத்தகைய சூழ்நிலைக்கும் காலநிலைக்கும் வாழப் பழகிக் கொண்ட எம்மைப் போன்ற பலருக்கும் மலையகம் நோக்கிப் பயணப்படும் போது அங்கு வீசும் குளிர் காற்று, இடையிடையே பெய்யும் மழை, எப்போதுமே குளிரான காலநிலை என்பன மனதிற்கு என்றும் இதமாகவே இருக்கும்.

நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறேன். விடுமுறைப் பொழுதைக் கழிப்பதற்காக பல்கலைக்கழக நண்பர்களுடன் சேர்ந்து கல்விச் சுற்றுலாவுக்காய் மலையகம் நோக்கி பயணித்தோம். யாழ்ப்பாணத்திலிருந்து 353 கிலோ மீட்டர் தூரத்தில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3567 அடி உயரத்தில் உள்ள கம்பளை நகரில் அம்புலுவாவ என 365 அடியில் ஒரு உயரமான மலை சிகரம் ஒன்றின் மீது மிகப் பெரிய கோபுரம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. 50 நண்பர்கள் ஒரு பேருந்தில் பயணம் செய்தோம். அந்தப் பேருந்துடன் மலையில் ஏறுவது என்பது மிகவும் கடினமானதாகவே காணப்பட்டதால் பேருந்தை மலை அடிவாரத்தில் நிறுத்திவிட்டு நண்பர்கள் அனைவரும் சேர்ந்து மலை அடிவாரத்தில் இருந்து அம்புலுவாவ கோபுரத்தை நோக்கி மெது மெதுவாக நடக்க ஆரம்பித்தோம்.

மலை உச்சியை நோக்கி ஏற ஏற எல்லோருக்குமே மூச்சு வாங்க தொடங்கிவிட்டது. இருப்பினும் மலையில் வீசிய குளிர் காற்று எம் களைப்பினை போக்கியது. இதுவும் வாழ்க்கையில் கிடைத்திராத ஒரு வித்தியாசமான அனுபவமாகவே நமக்கு அமைந்திருந்தது.


இலங்கையைப் பொறுத்தவரை இலங்கையின் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் கம்பளை நகரம் அமைந்துள்ளது. இது கண்டி நகரில் இருந்து தெற்கு திசையில் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு காணப்படுவது தான் அம்புலுவாவ மலை உச்சி. போகும் வழியில் இடை இடையே அமர்ந்து இருந்து நாம் மலையுச்சியை நோக்கிப் பயணித்தோம். குறித்த மலை உச்சியை நோக்கி நடக்கும் போது நான்கு மத ஸ்தலங்களும் அங்கே அமைந்திருந்ததை எம்மால் பார்க்க முடிந்தது. அது தவிர நாட்டின் பல பக்கங்களிலிருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தந்து கொண்டிருந்ததையும் காண முடிந்தது. அது மாத்திரமன்றி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் அதிகமாகவே அம்புலுவாவ கோபுரத்தைக் கண்டு களிப்பதற்காக வந்து கொண்டிருந்தார்கள். மேலும் இந்த மலைப் பகுதியை சுற்றியுள்ள பசுமையான காடுகளில் 80 வகையான தாவரக் குடும்பங்களும் 200 வகையான தாவரங்களும் காணப்படுகின்றன. அது என்றும் பசுமையான மழைக் காடாகவே இருக்கிறது.

கடந்த 2012 ஆம் ஆண்டில் அந்த பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான காடுகள் அழிந்து சேதமடைந்துள்ளதையும் எம்மால் பார்க்க முடிந்தது. இவ்வாறாக நண்பர்கள் அனைவரும் சேர்ந்து மலை உச்சியை சென்றடைய கிட்டத்தட்ட எமக்கு இரண்டு மணி நேரம் பிடித்து விட்டது.நடந்து சென்ற அந்த இரு மணி நேர பகுதிக்குள் பல இயற்கை காட்சிகளை ரசித்து பிரமித்து விட்டோம். இவ்வாறாக சிரமப்பட்டு மலை உச்சியை அனைவரும் அடைந்து விட்டோம். பின்னர் அந்த உயரமான கோபுரத்தில் ஏறத் தொடங்கினோம்.

குளிர் காற்று சுற்றிவர மலைத்தொடர்கள் எனப் பார்ப்பதற்கு அத்தனை அழகான சூழலாகவே அது காட்சி தந்தது. அந்த மலை உச்சியில் உள்ள உயர்ந்த கோபுரத்தில் ஏறி நின்று பார்த்தால் கம்பளை நகர் முழுவதையும் இயற்கை அழகுடன் பார்த்து ரசிக்க முடியும். அதன் பின்னர் மாலைப்பொழுது மெல்ல மெல்ல தணிந்து இரவுப் பொழுதினை அழைக்க ஆரம்பித்த போது எமது பயணத்தை முடித்துக் கொண்டு மலை உச்சியில் இருந்து மீண்டும் மலையடிவாரத்தை நோக்கி நாம் இறங்கத் தொடங்கினோம். இவ்வாறு வாழ்க்கையில் பெற்றுக் கொள்ள முடியாத பல அனுபவங்களை இந்தப் பயணத்தின் மூலம் நாம் பெற்றுக் கொண்டோம்.




**கொ.பிலிஸ்ரன்ராஜ**
**ஊடகக்கற்கைகள் துறை**
**யாழ் பல்கலைக்கழகம்**



SCAN ME
தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

# முதலாவது ஆண்டு நினைவுகளில் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி துரைச்சாமி மாஸ்டர்!



**(அறிவின் அகரம் சொல்லித் தந்த சிகரமாக விளங்கிய யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி துரைச்சாமி மாஸ்டர் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)**

அறிவின் துளிகளைஅள்ளிவந்து வகுப்பறையெங்கும் புதுமை செய்கிற அற்புத வித்தகராக விளங்கிய ஆசான் அவர்கள் பல மாணவர்களின் வாழ்வில் பல திருப்பு முனைகளுக்குக் காரணமாக போகிறார் என்பது எமக்கு அப்போது தெரியாது.

ஆசிரியர் ஒருவர் தன் பணியை ஆழமாக நேசித்து மாணவர்கள் மேல் நிபந்தனையில்லாத நம்பிக்கையும் கொண்டிருந்தால் அவர் காலங் காலமும் நினைக்கப்படுவார் என்பதற்கு நிகரற்ற உதாரணம் தலைமை ஆசிரியர் துரைச்சாமி மாஸ்டராவார்.

யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி வரலாற்றுடனான நமது இளம்பராய இணைப்பை - பிணைப்பை ஆசிரியர்கள் தவிர யாரால் பலப்படுத்த முடியும்? அத்தகைய ஆசிரியர்களுள் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளவரே ஆசான் துரைச்சாமி மாஸ்டர்.

யாழ்ப்பாணத்தின் புகழை உலகெங்கும் பரவிடச் செய்த சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக (Lower School Head Master) பணியாற்றிய வைத்தியலிங்கம் துரைச்சாமி (30/06/1925 - 18/04/2023) அவர்கள் மெல்பேர்ணில் இறைபதமடைந்தார்.

அவர் கை பிடித்து சொல்லித் தந்த எண் கணிதமும், நற்தமிழ் அறிவுமே எமை இன்றைய வாழ்வுக்கு கைதூக்கி விட்டுள்ளது என்பதனை இப்போது நாம் நன்றியுடன் அறிகிறோம்.

அறிவுத் தூண்டுகோல்களுக்கு அகரம் சொல்லித் தந்த சிகரமான மறைந்த வைத்தியலிங்கம் துரைச்சாமி ஒரு சிறந்த நல் ஆசிரியர். பொறுப்போடும் விருப்போடும் கற்பிப்பவர். அவர் ஆரோக்கியமான தமிழ் மாணவ சமுதாயத்தை உருவாக்க எப்போதும் விழிப்போடிருந்தவர். தலைமை ஆசிரியராக இருந்தனால் கற்பிக்கும் சக ஆசிரியர்களின் திறனிலும் நம்பிக்கை வைத்திருந்தவர்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக பணியாற்றிய அவரது அயராத உழைப்பானது ஒவ்வொரு மாணவர் மீதும் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. அவர் தனது மாணவரின் மீது அசையாத நம்பிக்கையை வைத்திருந்தார். இளம் மாணவர்களிடையே ஓர் இணைப்புப் பாலமாக சமூகத்திற்கு சிறந்த ஒரு வழி காட்டியாக மிளிர்ந்தவர்.

இளம்பராயத்தில் எமக்கு படி படி என பாடஞ்சொல்லும் ஆசான் தெய்வத்தினும் ஒரு படி மேல் தான்.

அவர் அறியாமை இருளகற்றும் அறிவுச்சூரியனாக விளங்கியவர். கட்டுப்பாட்டை கண்டிப்பாக கடைப்பிடித்த பொழுதிலும், ஆசான் துரைச்சாமி மாஸ்டர் கருணை மிகுந்த உளம் படைத்தவர். கல்லூரியிலும் சமுதாயத்திலும் தேவையிலிருக்கும் எவருக்கும் அயராது உதவி செய்தவர்.

உங்களின் கரும்பலகை பாடம் தான் பலரின் வாழ்வை உயர்த்தியது.

எண்ணமெலாம் மாணவர் நலனிலேயே நிமிடங்களை நகர்த்துகிற நல்லாசானாகிய உங்களை, இப்பெருவுலகில் ஏதோ ஒரு பரியோவான் மாணவனின் மனதில் நிச்சயம் எழுதப்பட்டுருக்கும் உங்களுக்கான நல்லாசிரியர் என்ற உயர்விருது.

மாணவர்களின் மனங்களைச் செம்மைப்படுத்துவதிலும், நமது சமூகத்தைக் கட்டமைப்பதிலும் தலைமை ஆசிரியரான உங்களின் பங்களிப்புக்கும், கடின உழைப்புக்கும் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

அவரின் உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது அவரது மாணவர்களாகிய நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

**ஐங்கரன்**
**விக்கினேஸ்வரா**

# தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம்!

## தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் ஓரணியாக செயற்படுவதே காலத்தின் தேவை!!







சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடக்கப் போகின்ற நிலையில், தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் மத்தியில், குழப்பம் தீவிரமடைந்து வருகிறது. சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தல், உண்மையில் தமிழர்களுக்கானது அல்ல. அது தமிழரோ, முஸ்லிமோ வெற்றிபெறக் கூடிய களமும் அல்ல. இந்த வகையில், ஜனாதிபதி தேர்தலை தமிழர்கள் தங்களுக்கான அரசியல் வழியாக ஒருபோதும் கருத முடியாது. ஆனால், இந்த தேர்தலில் தமிழர்களும், தவிர்க்க முடியாதபடி பங்காளிகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

2005 ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு, இந்த தேர்தலில் தமிழர்கள் ஏதோவொரு வகையில், ஈடுபடுவதற்கு, தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளால் வழிகாட்டப்பட்டனர். 2005இல் ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிக்கும் அரசியல் உத்தி கையாளப்பட்டது. 2010, 2015, 2019 என மூன்று தடவைகள், எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர்களாகப் போட்டியிட்ட சரத் பொன்சேகா,

மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச போன்றவர்களை ஆதரிக்கும், இன்னொரு அரசியல் உத்தி கையாளப்பட்டது. இந்தநிலையில் தான், வரப் போகும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களை, தமிழ்த் தேசிய தரப்புகள் எவ்வாறு வழிகாட்டப் போகின்றன என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இந்த விடயத்தில், 3 நிலைப்பாடுகள் தென்படுவதால், தமிழ்த் தேசிய தரப்புகள் மூன்றாகப் பிளவுபட்டிருக்கின்றன என்றே கூற முடியும்.

முதல் தரப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இது, 2005 போலவே, தங்களால், அடுத்து வந்த ஜனாதிபதி தேர்தல்களிலும் கையாளப்பட்ட, தேர்தல் புறக்கணிப்பு உத்தியை கையாள வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறது. இரண்டாவது தரப்பு, இன்னமும், யாரை ஆதரிப்பது என்று தீர்மானிக்காவிட்டாலும், ஏதோவொரு, பிரதான சிங்கள வேட்பாளரை ஆதரிக்கும் அரசியல் உத்திை நம்பியிருக்கிறது. அதற்காக பேரம் பேசலாம் என்று, காத்திருக்கிறது.

மூன்றாவது தரப்பு, தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் ஊடாக, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள், அபிலாசைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்பதை உலகிற்கு வெளிப்படுத்தலாம், அவற்றுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தலாம் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறது. இந்த மூன்று அரசியல் உத்திகளில் எது சரியானது- தமிழ் மக்களின் நலன்களுக்கு உகந்தது- தற்போதைய சூழலுக்குப் பொருத்தமானது, என்ற விடயத்தில் கடுமையான குழப்பங்கள் நிலவுகின்றன.

தேர்தலைப் புறக்கணிக்கும் நிலைப்பாட்டில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் மாற்றுக் கருத்துக்கள் வெளிப்படவில்லை. ஆனால், பேரம் பேசும் பலத்தை பயன்படுத்த வேண்டும் என்று கூறுகின்ற தரப்பிலும், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்ற தரப்பிலும், மாற்றுக் கருத்துக்கள் உள்ளன. தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த விரும்பும் தரப்புகள் ஐக்கியப்பட்டு நிற்கின்றன என்று கூறமுடியாது. பேரம் பேசலை வலியுறுத்தும் தரப்புகளில் பொதுவேட்பாளருக்கான ஆதரவு இல்லை என்றும் கூறமுடியாது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் உள்ள ஐந்து கட்சிகளும், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றன.


தமிழ் மக்கள் கூட்டணியும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறது. ஆனால், இந்த இரண்டு தரப்புகளும் ஒரே அரசியல் திட்டத்தின் கீழ் செயற்படுகின்றனவா என்ற குழப்பம் காணப்படுகிறது. தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான பொதுக் கருத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கவுள்ளதாக, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அறிவித்திருந்த பின்னர், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் பொது வேட்பாளர் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்தார். அவர், யாரை வேட்பாளராக நிறுத்தலாம், அதற்கான குழுக்களை அமைப்பது குறித்து கலந்துரையாட விடுத்த அழைப்பை, எந்த தமிழ்க் கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தனியனாகவே சில சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியிருக்கிறார். தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சி பாதிக் கிணற்றை தாண்டுவதற்கு முன்னரே, சி.வி. விக்னேஸ்வரன் அவசரப்படுகிறார். இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவது கடினம். முடியாது என்று கூடச் சொல்லலாம். இன்னொரு முக்கிய தரப்பாக உள்ள, இலங்கை தமிழ் அரசுக் கட்சி அவ்வாறில்லை. அதன் பெருந்தலைவரான, இரா.சம்பந்தன் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் திட்டத்தை எதிர்க்கிறார். அதுபோன்றே, அவரால் அரசியலுக்கு கொண்டு வரப்பட்ட, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற திட்டத்தை எதிர்க்கிறார்.

அவர் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்காக, மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல, ராஜபக்சவினருடன் தொடர்புபடுத்த முற்படுகிறார். சிங்கள இனவாத- தீவிரவாத சக்திகளின் பின்னணி இருக்குமோ என்ற ஊகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறார். அதேவேளை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான, சி.விகே. சிவஞானம், எல்லாக் கட்சிகளும் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்தினால், அது சரியான உத்தியாக இருக்கும் என்றும், ஆனால் அவ்வாறு பொது வேட்பாளரை தேடிச் செல்லும் போது பிரச்சினை வரும் என்பதால், எட்டாத பழம் புளிக்கும் என்ற வகையில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டு, இப்போது திரிசங்கு நிலையில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனோ, தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் திட்டம், காலத்தின் தேவை என்கிறார், அதற்கு தாம் கொள்கை அளவில இணங்குவதாகவும் கூறுகிறார். அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகரான, சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழ் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் பேரினவாத ஆட்சியாளர்கள் வெல்வதற்கே துணை செய்கிறார்கள் என்கிறார் ஆக, தமிழ் அரசுக் கட்சி, சொந்த நிர்வாகிகளைத் தெரிவு செய்வதில் மாத்திரமன்றி, ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளும் விடயத்திலும் முரண்பட்டு நிற்கிறது. பிளவுபட்டு போயிருக்கிறது.


இவ்வாறான நிலையில், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தில், பொதுக் கொள்கை ஒன்றைக் கூட உருவாக்க முடியாத நிலையில் உள்ள தரப்புகளால், எவ்வாறு தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க முடியும் என்ற கேள்வி எழுந்திருக்கிறது.ஜனாதிபதி தேர்தல் என்பது, நிச்சயமாக தமிழர்களுக்கானதுஅல்ல. ஆனாலும் அதனை தமிழர்களுக்கு சார்பானதாக மாற்றிக் கொள்ள வேண்டும். அது தான் காலத்தில் தேவை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தேர்தலைப் புறக்கணிப்பது, யாரோ ஒருவரை வெல்ல வைக்கும் முயற்சி என்று சித்தார்த்தன் கூறியிருக்கிறார். இவ்வாறான கருத்துக்களும் சரி, பொதுவேட்பாளரை நிறுத்தும் திட்டத்துக்குப் பின்னால் ராஜபக்சவினால் இருப்பதாக சுமந்திரன் வெளியிட்ட சந்தேகமும் சரி, பொது வேட்பாளரை நிறுத்துவது, பேரினவாத ஆட்சியாளர்கள் மற்றும் அமெரிக்கா, இந்தியாவின் நிகழ்ச்சி நிரல் என்ற கஜேந்திரனின் கருத்தும் சரி, பிரசார நோக்கம் கொண்டவை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

தங்களின் தரப்பை நியாயப்படுத்துவதற்காக, எதிர்த்தரப்பை, மலினப்படுத்துகின்ற அரசியல். தமிழ்த் தரப்பு எந்த முடிவை எடுத்தாலும், யாரோ ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவது, தவிர்க்க முடியாதது. அவர் சிங்களவராக இருப்பார் என்பதும் மாற்ற முடியாதது. தமிழர்கள் விரும்பினாலும் விரும்பாது போனாலும், இது நடந்தே தீரும். இவ்வாறான சூழலில் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்கும், நலனுக்கும் எது சரியான, மிகப் பொருத்தமான, அரசியல் உத்தி எனத் தீர்மானிப்பது தான் இப்போது முக்கியமே தவிர, வீண் வாதப் பிரதிவாதங்கள் அல்ல. ஏதோ ஒரு நிலைப்பாட்டுக்குள் தமிழர் தரப்பு வர வேண்டும். அது எதுவாக இருந்தாலும், அந்த அரசியல் உத்தியை ஒன்றுபட்டுக் கையாளுகின்ற முடிவுக்கு வர வேண்டும். ஒன்றுபட்டு செயற்படுதல், ஒற்றுமையாக அரசியலைக் கையாளுதல் தான் இப்போது முக்கியம் ஏனென்றால், தமிழர் தரப்பின் இலக்குகள் திட்டமிட்டுப் பலவீனப்படுத்தப்படுகின்றன. தமிழர்களின் இலட்சியத்தை சிதைக்க இரகசிய நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில், தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் கட்சிகளாக- வேறு சார்புநிலைக் குட்பட்டவர்களாக வெவ்வேறு கருத்துக்களுடன் இயங்குவதை விட, ஒரே நிலைப்பாட்டுக்குள் வருவது தான் பொருத்தம். அத்தகைய பொது நிலைப்பாட்டுக்குள் தமிழினம் வர வேண்டியது முக்கியம். அந்த வரலாற்றுக் கடமைக்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். அததகைய தொரு தருணத்தை தான் தமிழினம் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறது.


–என். கன்னன்–

# வடக்கின் தென்னைசார் பொருளாதாரத்தை சிதைக்கும் வெள்ளை ஈ!



வெள்ளை ஈக்களின் பரவல் குறித்த கரிசனைகள் கடந்த 2 மாதங்களாகவே வெளிப்படுத்தப்பட்டு வந்த போதிலும், அதன் ஆபத்துக்கள் தற்போது உச்சக்கட்டமாக உணரத் தலைப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் வெள்ளை ஈக்களின் பெருக்கத்தாலும் அதன் தாக்கத்தாலும் தம் பொருளாதாரத்தைப் பறிகொடுத்து நிற்கும் குடும்பங்கள் பல. வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காய் ஏற்றுமதி மாத்திரமல்லாது இளநீர் வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவற்றை நம்பியிருக்கும் பலநூறு குடும்பங்களின் பொருளாதாரம் இன்று புரட்டிப்போடப்பட்டுள்ளது என்கின்றார் கிளி நொச்சியைச் சேர்ந்த பண்ணையாளர் ஒருவர். கிளிநொச்சியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலுள்ள தென்னைகளில் வெள்ளை ஈக்களின் தாக்கங்கள் தற்போது அவதானிக் கப்பட்டுள்ளன.

**தோற்றமும் பரவலும்**

வெள்ளை ஈக்கள் தெற்காசியாவுக்கு உரித்தானவை அல்ல. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் 2004ஆம் ஆண்டு இந்த ஈக்கள் முதன்முதலாக அவதானிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 2016ஆம் ஆண்டிலும் இலங்கையில் அவ தானிக்கப்பட்ட இந்த ஈக்கள் அதன் பின்னர் இலங்கைக்குள் தொடர்ச்சியாக தனது இருப்பை உறுதிசெய்து வருகின்ற போதிலும் இவ்வருடப் பரவல் தான் அதியுச்சம் வாய்ந்தது என்கின்றனர் தாவரவியலாளர்கள். வெள்ளை ஈக்கள் பொதுவான வெப்பத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பரவக் கூடியவை. இனிவரும் நாள்களில் அதீத வெப்பநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப் படும் நிலையில் வெள்ளை ஈக்களின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என துறைசார் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இயல்பாகவே கூடுதல் பரவுகையுடைய வெள்ளை ஈக்களுக்கு வடமாகாணத்தில் சமீபத்திய தட்பவெப்பநிலை ஒரு போனஸ். இந்தக் காலநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி வெள்ளை ஈக்கள் தங்கள் பரவுகையை பலமடங்கு உயர்த்தவே செய்யும் என்பதால் உச்ச விழிப்புணர்வுடனும் தற்காப்பு நடவடிக்கைகளுடனும் செயற்பட வேண்டியது பொதுமக்களிடத்தும் பண்ணையாளர்களினதும் காலத்தேவையாகவே உள்ளது. இல்லையேல் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்து, இப்போது 100 தொடக்கம் 120 ரூபா வரையில் விற்கப்படும் தேங் காய்கள் இனிவரும் காலங்களில் 250 ரூபா தொடக்கம் 300 ரூபா வரைக்கும் விற்கப்பட்டாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

**தென்னையை மட்டுமா வெள்ளை ஈ தாக்கும்?**

வெள்ளை ஈ என்பது ஒரு வெள்ளை இலையான். அது தென்னையில் மட்டுமல்ல மாதுளை, கறிவேப்பிலை. உழுந்து, பயறு, நாவல், எலுமிச்சை, வாழை போன்ற மரங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இவற்றின் முட்டைகள் சுருள் வடிவத்தில் இலையின் அடிப்பாகத்தில் காணப்படும். குஞ்சுகளும் முதிர்ந்த ஈக்களும் ஓலையின் அடியில் இருந்து சாற்றை உறுஞ்சுகின்றன. இவை வெளியேற்றும் தேன் போன்ற திரவக் கழிவுகள் கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் பரவுகின்றது. அதனால் ஓலைகளின் மேல் கருப்பு நிறமுள்ள பூஞ்சணம் படர்கின்றது. 20 தொடக்கம் 30 நாள்களில் புழுப்பருவம் வளர்ச்சியடைந்து, வட்டம் கூட்டமாக தென்னை ஓலையின் அடிப்பகுதியை அடையும். காற்றின் மூலம் அடித்துச் செல்லப்பட்டு ஒரு மரத்தில் இருந்து அடுத்தடுத்த மரங்களுக்கும் அருகில் உள்ள தோட்டங்களுக்கும் பரவி பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றினைக் கட்டுப்படுத்த தற்போது இன்னொரு பூச்சியினத்தை தென்னை மரங்களில் பரப்பி விடுகின்றனர். இவை இந்த ஈக்களினை தின்று அழிக்கக்கூடியவை என்று சொல்லப்படுகின்றது. எனினும் இந்தத்திட்டம் முழுமையான வெற்றியைப் பெற்றுவிட்டதா என்ற தெளிவுபடுத்தல் இன்னமும் வழங்கப்படவில்லை. ஆதலால், தென்னைசார் பொருளாதாரத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பலநூறு குடும்பங்களுக்கு வெள்ளை ஈக்கள் பெரும் தலைவலியாகவே தொடரப்போகின்றனவா? என்ற ஐயப்பாடு பெருவாரியாகவே எழு கின்றது.



**ஸ்ரீதரன் தமிழினி**
ஊடகக்கற்கைகள் துறை
மூன்றாம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்



## கிழக்கில் சிவந்த சுவடுகள்...

தொடர்.. 5

**திருகோணமலையிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள்**

**சம்பூர் படுகொலை**

மூதூருக்கு கிழக்கே சகல வளங்களும் நிறைந்த கிராமம் சம்பூர். இங்கு கடற்றொழிலாளர்களும், விவசாயிகளும் கால்நடை வளர்ப்போரும் என தனித்தமிழ் மக்கள் வாழும் இக்கிராமம் பல தமிழ்க்கிராம மக்களின் பாதுகாப்பரணாகவும் திகழ்ந்தது.

1985ஆம் ஆண்டு தொடக்கம் இந்த கிராமத்தில் இருந்த மக்கள் மீது அரச படையினர் காலத்திற்கு காலம் தாக்குதல் நடத்தி அப்பாவி பொதுமக்களை கொன்றொழித்தனர். இக்கிராமம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் அரச படையினரின் கட்டுப்பாட்டிலும் மாறி மாறி இருந்து வந்துள்ளது. இப்பிரதேசத்தை நோக்கி படைநகர்வை மேற்கொள்ளும் அரச படையினர் இக்கிராமத்தில் இருக்கும் பொதுமக்களை படுகொலை செய்வதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

1990 காலப்பகுதியில் தமிழர் வாழும் பகுதிகளில் குறிப்பாக கிழக்கு பகுதியில் அரச படைகளும் முஸ்லிம் ஆயுதகுழுக்களும் அப்பாவி தமிழர்களை மிக மிக மோசமாக படுகொலை செய்தமை குறிப்பிடத்தக்கது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என தமிழின படுகொலைகள் நீண்டு சென்றது. இதற்கான காரணங்களையோ, நீதியையோ எந்த அரசும் சரி, மனிதவுரிமை அமைப்புக்க ளும் சரி வழங்க முன்வரவில்லை.

அரச படைகளும் முஸ்லீம் ஆயுதக்குழுக்களும் இணைந்து நடத்திய படுகொலையில் மிக முக்கியமான படுகொலை 07.07.1990-09.07.1990 எனும் மூன்று நாளில் ஏறத்தாழ நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் சம்பூர் மண்ணில் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப்படுகொலையானது திட்டமிடப்பட்டு நிகழ்ததப்பட்டதோடு, ஒரு பழிவாங்கும் படலமாகவும் அமைந்தது எனலாம். மூதூரை விடுதலைப்புலிகள் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர். இதை முறியடிக்க பாரிய நடவடிக்கை ஒன்றை அரச படைகள் மேற்கொண்ட போது அந்நகர்வை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். இதற்கு பழிதீர்க்கவே அரச படையினர் தன் முழுப்பலத்தையும் பயன்படுத்தி பாரிய படைநகர்வை சம்பூரை நோக்கி நகர்த்தி அப்பாவி தமிழர்களை படுகொலை செய்தனர். சம்பூர் படுகொலையின் போது பாடசாலை ஆசிரியர், பன்னிரண்டு வயது மாணவன் உட்பட பல மாணவர்கள், கிராமசபை தலைவர், பாலூட்டும் தாய் என பலரும் படுகொலை செய்யப்பட்டனர். சம்பூரில் படுகொலையான மக்களை நினைவு கூர்ந்து ஒர் நடுகல் நட்டு வழிபடக்கூட அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

## அனுரவிடம் சில...

மக்களுக்கு எதிரான தனது முன்னைய நிலைப்பாட்டுக்காக ஜேவிபி பகிரங்கமாக மன்னிப்பு கேட்குமா?

மேற்படி கேள்விகளுக்கு ஜேவிபியும் ஜேவிபிக்கு வாக்களித்தால் என்ன என்று கேட்கும் தமிழர்களும் பதில் சொல்ல வேண்டும்.கனடாவிலும் யாழ்ப்பாணத்திலும் அனுரகுமார ஆற்றிய உரைகளில் காணப்படும் கவர்ச்சியான மனித நேய வார்த்தைகளைக் கண்டு மயங்கும் தமிழர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். இனப்பிரச்சினை ஒரு மனிதாபிமான பிரச்சினை அல்ல. மொழி பிரச்சினை வழிபாட்டுப் பிரச்சினை போன்றனவும் உதிரிப் பிரச்சினைகள் அல்ல. அவை யாவும் தமிழ் மக்களின் கூட்டு உரிமைகள் சம்பந்தப் பட்டவை. கூட்டு உரிமை என்று எப்பொழுது கேட்கலாம் என்றால் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான். ஆனால் ஜேவிபியும் அதற்கு வாக்களித்தால் என்ன என்று கேட்கும் தமிழர்களும் அரசியல் அடர்த்தி மிக்க விடையங்களை மேலோட்டமாகவும் மனிதாபிமான வார்த்தைகளிலும் கதைத்து விட்டுப் போகப் பார்க்கின்றார்கள். அரசியல் விவகாரங்களை அவற்றுக்குரிய அரசியல் அடர்த்தி மிக்க சொற்களின் ஊடாகத்தான் உரையாடலாம். அடர்த்தி குறைந்த சொற்களுக்கு ஊடாக உரையாடுவதே ஓர் அரசியல் தான் தந்திரம் தான்.

ஜேவிபி வெளிப்படையான அரசியல் அடர்த்தி மிக்க வார்த்தைகளில் இனப் பிரச்சினை தொடர்பில் உரையாட வேண்டும். அவ்வாறு உரையாடினால் தென்னிலங்கையில் உள்ள சிங்கள பௌத்த வாக்குகளை அவர்கள் இழக்க வேண்டி வரலாம். எனவே இனப் பிரச்சினை தொடர்பில் ஜெவிபி தெளிவாகப் பேசாமல் ஆனால் கவர்ச்சியாக மனிதாபிமான நோக்கு நிலையில் இருந்து பேசி வருகிறது. ஜேவிபியில் முன்பு உறுப்பினராக இருந்து அதிலிருந்து விலகிய ஒருவர் எழுதிய நினைவுக் குறிப்பு ஒன்றில் அவர் பின்வரும் பொருள் பட கூறுகிறார். “ராஜபக்சக்கள் வெளிப்படையாகத் தெரியும் இனவாதிகள்.ஆனால் ஜேவிபி சமூக நீதியின் பின் பதுங்கும் ஓர் இனவாதி “ என்று. இக்கூற்று உண்மையா இல்லையா என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ஜேவிபிக்கு மட்டுமல்ல ஜேவிபிக்கு வாக்களித்தால் என்ன என்று கேட்கும் தமிழர்களுக்கும் உண்டு.

# 2026 இலங்கை வறுமை வீதம் 22 வீதத்தைவிட அதிகரிக்கும்!


## உலக வங்கி எச்சரிக்கை

2026 ஆம் ஆண்டில் இலங்கையின் வறுமை விகிதம் 22 வீதத்தை விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது உலக வங்கி அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டு 2.2 வீத மிதமான வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் நாடு இன்னும் அதிக அளவிலான வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மையை எதிர்கொள்வதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் வறுமை விகிதங்கள் தொடர்ச்சியாக நான் காவது ஆண்டாக அதிகரித்துள்ளதாகவும், 2023ஆம் ஆண்டில் 25.9 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த நிலையில், 2026ஆம் ஆண்டில் நாட்டின் வறுமை விகிதம் 22 சதவீதத்தை விட அதிகரிக்கும் என்றும் உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



தேசியம் THESIYAM



அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

**சுன்னாகம்** 021 224 2022

**நெல்லியடி** 021 226 0700

**பருத்தித்துறை** 021 226 1100

**ஆவரங்கால்** 021 222 6688

**சித்தங்கேணி** 021 225 2500

**சாவகச்சேரி** 021 227 0700

**பூநகரி** 021 320 1818

**முழங்காவில்** 021 300 6544

**விஸ்வமடு** 021 320 1515

**மன்னார்** 023 225 1656

**கிளிநொச்சி** 021 228 5505

**வவுனியா** 024 222 7777







இப்பத்திரிகை 26.04.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.